
1134

PROVED BY THE TEXT-BOOK COMMITTEE.
(Vide Fort St. George Gazette Part I-B dated Nov. 19, 1929.)

பன்னிரு நீதிக்கதைகள்

(Twelve Moral Stories)



BY

KRISHNA AYYAR,

Schools, Dindigul Taluk Board.

———

[*Price As. 4.*

TB
த. 31
1430.
17526

Approved by the Text Book Committee
Vide Fort St. George Gazette Part I B dated Nov. 19, 1929.

பன்னிரு நீதிக்கதைகள்.

(Twelve Moral Stories)

3168
S948/3

SECOND EDITION

BY


S. KRISHNA AYYAR,

Supervisor of Schools,

DINDIGUL TALUK BOARD.

OF THE
28 MAY 1930

All Rights Reserved] 1930 [*Price As 4.*



பொருளடக்கம்.

		பக்கம்.
1. அதிகாலையிலெழுந்திரு	...	1
2. ஆவலுடன் கடவுளைப் பணி	...	6
3. இன்றுசெய்வதை இன்றேசெய்	...	11
4. ஈனத்தொழிலைச் செய்யாதே	...	15
5. உன்னதமான நோக்கங்கொள்	...	23
6. ஊக்கத்தோடெதையும் செய்	...	30
7. எந்தக் கருமமும் எண்ணித்துணி	...	33
8. ஏளனமொருவரையும் செய்யாதே	...	36
9. ஐயமிடுவதே அழியாச் செல்வம்	...	43
10. ஒருவரையும் பொல்லாங்கு சொல்லாதே	...	48
11. ஓயாவம்பு வளர்க்காதே	...	52
12. கௌரவமாகத் தொழில்கள் செய்	...	56

PREFACE.

At the outset let me thank the author of this lovely book for having given me an opportunity to write a few words of introduction to his book. I have had the privilege and good fortune to know the author for the last five years.

In the usual course the writing of the preface would have fallen on a worthy personage, whose words would have been a befitting password to the merit of this book. The person who had been the fountain head, originator and encourager of the little book intended for the rising generation has been snatched away from our midst by the hand of cruel death. He had been an ornament of this town and an illustrious member of a family famous for its literary and political pursuits. I refer to the late revered Mr. C. Ponnuswamy Naidugaru B. A. who was a member of the Madras Legislative Council for two terms from 1920-1926 and a member, Vice-President and President of the Dindigul Taluk Board for more than 12 years. Had he been alive, he would really have taken pleasure in this beautiful compendium of this well deserving author, whose activities in all walks of life were so much appreciated by him. But that was not to be; and in his place, his mantle has fallen on my humble shoulders. As a member of that family and as one closely related to him, the author has approached me to replace what he had lost from the hand of his illustrious encourager. But I am rather diffident whether I would be able to rise equal to the task entrusted to me. Under ordinary circumstances, I would have declined the honour thrust on me. But circumstanced as I am, and as a special momento to the blessed memory of my late revered father-in-law Mr. C. Ponnuswamy Naidu garu, I have undertaken this task of writing a sort of introduction with diffidence but with the invocation to his blessed soul that had sought rest elsewhere from the turmoil of this mundane world.

I cannot claim to be a scholar in the Tamil lore, but I have been in my own turn a humble follower and appreciater of the Tamil muse, and perhaps only on that basis I make bold to pen these few lines.

I had gone through the whole sketch in manuscript and I must confess my admiration when I say that the whole book is a treasure-house of morals befitting the tender and plastic imagination of Young India for whose benefit it is intended and on whom so much of the mother country depends. The language in which the stories are couched is extremely simple, apt, thought-provoking, elegant, readable and the style is quite simple and easily understandable by even laymen. Abstract homely truths and basic principles will not be appealing to the impressionable minds of the younger generation, and to bring home such truths, it is meet that it should be told in the form of a story which the young boys and girls would, during the spare and leisure hours, either be narrating to one another or narrate them at home to their parents or elders. This idea of putting such morals in the form of stories has been well planned and worked up by the learned author and he deserves all commendation. Further, this very conception of the book is in accord with instructions in the Lower Elementary Schools of modern times. It is a truism to say that the book will have its own educative value. The ideas are original and it is not too much to say that the public is indebted to the learned author for his humble and honest attempt at bringing forward a book of the type under review, and I am fully confident that this book will be assigned a high place among the literature intended for the Elementary Schools commensurate with the laudable principles which it tries to inculcate into the minds of the younger folk. With the pious hope that the book will receive all appreciation at the hands of the public, that it would form a fitting text book for the moulding of the younger generation, and would receive the encouragement which it richly deserves at the hands of the educational authorities, and with the request that the author of this book would bring in future many books of this type to the advancement and betterment of the younger generation, I commend this book to the world at large.

DINDIGUL,
23rd March 1929 } M. R. RAMANUJULU, M.A.,LL.B.

REVIEW

The author Mr. S. Krishna Ayyar, who is a fellow-worker with me in the field of Elementary Education, has asked me if I would write a few words about his book and I do so with great pleasure.

The book is well planned and has been written to answer a purpose. The subject matter is of great moral value and the language and style, simple and straight enough to be within easy understanding of Elementary School children. The manner of narration is lively and vigorous like the author himself and is sure to rouse the interest of the pupils and stir them up to higher ideals of living.

The book may be used with great advantage as a non-detailed book for Standard IV and in this connection I would say a few words as to how this may best be done.

The practice of doing the book in class like the ordinary reading book should be given up. The pupils should be asked to read it at home and the teacher should question the pupils upon the subject matter. Then the teacher should ask the pupils to bring up to him any difficult words, phrases or points, which they do not understand and these should be explained.

After this is over some time should be devoted by the teacher in showing to the pupils how the central idea has been developed throughout the whole essay, first in a few words, then in detail and how at last it has been illustrated with a story, which clearly brings out the truth. The ideas connecting the several paragraphs should also be brougut out and the pupils made to see the essay as one whole. The pupils may then be made to write out a few sentences of their own about the topic in general and tell the illustrative story in a few words and then show in the concluding paragraph how the story illustrates the moral principle.

A fourth standard pupil who has carefully read all these stories will be able to write similar essays developing any given moral and this will have to be followed up by a number of such exercises and a large variety of them in Standard V.

If this or any similar treatment is adopted, the book will have served its purpose and the object of the author best achieved.

DINDIGUL,
Dated 4—4—1930.

N. TYAGARAJA AYYAR, B.A., L.T.,
Deputy Inspector of Schools,
(Senior Grade)
DINDIGUL RANGE.

I have known the author Mr. S. Krishna Ayyar, Supervisor of Elementary Schools Dindigul Taluk Board for the past four years.

His attempt in writing this book on "Morals", to the School children is to be encouraged by all, more particularly by those who are engaged in the task of educating the children of the land. Though the book is styled as "Twelve Moral Stories," the book is rich with Morals from the beginning to the end.

This book of morals by Mr. S. Krishna Ayyar has been illustrated with suitable Stories, selected from Puranas and the life of great personages such as late Sir. T. Muthuswamy Ayyar of Tiruvarur.

The stories are well chosen and written in simple style, suited for School children.

Stories are valuable in as much as they teach excellent moral principles.

The book is just what Elementary Schools need for imparting moral instruction.

I wish his venture every success.

T. V. NILAKANTA SASTRIAR, B.A., L.T.,
Deputy Inspector of Schools,
(Senior Grade)
VILLUPURAM RANGE.

VILLUPURAM,
Dated 6—1—30



ஸர். தி. முத்துசாமி ஐயர்.

கஜமுகன் துணை.

பன்னிரு

நீதிக் கதைகள்.

1. அதிகாலையிலெழுந்திரு.

நாம், அதிகாலையில், படுக்கையை விட்டு எழுந்திருக்க வேண்டும். அது நமக்குப் பலவித நன்மைகளைக் கொடுக்கும். தேகவலிமை, நோயின்மை, புத்திக்கூர்மை, இவை அதிகாலையில் எழுந்திருப்பவனுக்குத் தானுகவே உண்டாகின்றன. இன்னும், உயர்குணங்கள், எந்தக் காரியத்தையும் செய்து முடிக்கும் திறமை, இவைகளும் அவனுக்கு ஏற்படும். ஆகையால் அந்தப் பழக்கத்தைச் சிறுவயதிலேயே நாம் கைக்கொள்ள வேண்டும். இப் பழக்கத்தைப் பின் பற்றி உயர் பதவிக்கு வந்த ஒரு சிறுவனுடைய ஜீவிய சரித்திரத்தை இங்கே படிப்போம்.

திருவாரூருக்குச் சமீபத்தில், உச்சிவாடி என்ற கிராமம் ஒன்று உண்டு. அதில் சுமார் தொண்ணூற்றைந்து ஆண்டுகளுக்குமுன், ஓர் ஏழைப் பிராமணன் வசித்துவந்தான். அவனுக்கு ஒரு

மகன் பிறந்து வளர்ந்து வந்தான். அவன் சிறு வனுய் இருக்கையிலேயே அவனது தாய் தந்தை யர் மாண்டுபோயினர். அவனுக்கு வேறு ஆத ரவு இல்லாம லாயிற்று. பையன் என்ன செய் வான். வயிற்றுப் பிழைப்புக்காக அவன் ஏதா வது ஒரு வேலையில் அமரவேண்டிய தாயிற்று. வேலைக்காகப் பல இடங்களில் முயன்றான். முடி வில் ஓர் கணக்கனிடம் மாதம் ஒரு ரூபாய் சம் பளத்திற்கு வேலையில் அமர்ந்தான். வேலையி லமர்ந்தது முதல், ஒவ்வொரு நாளும், அதி காலையி லெழுந்திருந்து, காலைக்கடன்களை முடித் துக்கொண்டு விரைவில் தன் எஜமானன் வீடு செல்வான். தன் வேலைகளைச் சுறு சுறுப்புட னும், சாமர்த்தியத்துட னும் செய்து கொண்டு வந்தான். அவன் நன்னடக்கை எல்லோர் மனதையும் கவர்ந் தது. யாவரும் அவனைப் பிரீதியுடன் ஆதரிக்கத் தொடங்கினர்கள். "அனுதைக்குத் தெய்வமே துணை", என்பது பழமொழி யல்லவா?

சில நாட்கள் சென்ற பிறகு, உச்சிவாடிக்கு அவ்வூர் தாசில்தார் வந்தார். அப்பொழுது சிறு வனுடைய பழக்க வழக்கங்களைக் கண்டார். சந் தோஷங்கொண்டார். அவன் தாய் தந்தையர் இல் லாத அனுதை என்று அறிந்தார். அவனைப் படிக்க வைத்தால் உயர் பதவிக்கு வருவான் என்ற நம்பிக்கை அவருக்கு உண்டாயிற்று. அவனை நாகப்

பட்டணம் கிறிஸ்தவ மிஷன் பாடசாலையில் சேர்ந்து படித்துவர ஏற்பாடுகளைச் செய்து வைத் தார். சிறுவன் இங்கேயும் வழக்கம்போல் காலை யில் எழுந்திருந்து, காலைக் கடன்களை முடித்து, பாடங்களை நன்முகக் கற்றுக்கொண்டு வந்தான். உபாத்தியாயர்களிடமும், சுற்றத்தாரிடமும், மற்ற பெரியோர்களிடமும் மரியாதையாய் நடந்து கொண்டான். அதிகாலையில் எழுந்திருக்கும் பழக் கம் அவனுக்கு தேக வலிமையையும், மன உற் சாகத்தையும் கொடுத்தது. அவனைக் கண்டோர் அனைவரும் அவனுக்கு மனம் இரங்கினர்கள். தினந்தோறும் தருமமாக உணவும் அளித்தார்கள். சிறுவனுக்குச் சொந்தத் தாய் தந்தையர் இல்லா விடினும், ஊராரெல்லோரும் தாய் தந்தைய ரா யினர். அதனல் சிறுவன் கவலையின்றி படிப்பில் கவனம் செலுத்தி வந்தான். பரீக்ஷைகளிலெல் லாம் முதலாவதாகத் தேறினன். மேலும், பலர் உதவியால் மேல் படிப்புக்குச் சென்னைக்கு அனுப் பவும் ஏற்பாடாயிற்று. சென்னையில் சர்க்கார் பாட சாலையில் சேர்ந்து படித்து வந்தான். அவனு டைய புத்தி நுட்பத்தைக் கண்டு பாடசாலைத் தலை வருக்கும் அவன் பேரில் பிரியம் ஏற்பட்டது. சிறு வனுடைய படிப்பின் திறமையைக் கண்டு போத காசிரியர்களும், பரீக்ஷாதிகாரிகளும் அவனிடம் அனுதாபம் கொண்டார்கள். அவனைக் கண்ட

போதெல்லாம், 'முத்துசுவாமி', என்று அன்போடு அழைத்து வந்தார்கள். முத்துசுவாமியும் படிப்பில் மிகக் கவனமுடையவனாய் ஒவ்வொரு பரீக்ஷையிலும் முதன்மையாகத் தேறி வந்தான். அதன் நிமித்தம் அவனை ஆதரித்து வந்தவர்களுக்கும், அவனைக் கற்பித்த உபாத்தியாயர்களுக்கும் நல்ல பெயர் உண்டாயிற்று. மற்ற பிள்ளைகள் சோம்பலுடன் படுக்கையில் புரண்டு பொழுது போக்குங்காலத்தில் முத்துசுவாமி தன் வேலையில் கண்ணும் கருத்துமாய் இருந்து வந்தான். சுறுசுறுப்பும், முகமலர்ச்சியும், கீழ்ப்படியும் குணமும், அவனிடம் குடிகொண்டிருந்தன. முத்துசுவாமி எல்லாப் பரீக்ஷைகளிலும் தேறின பிறகு, பாடசாலைத் தலைவர் அவனைத் தமது பாடசாலையிலேயே ஒரு உபாத்தியாயராக நியமனம் செய்து கொண்டார். முத்துசுவாமியின் அறிவும் நாளடைவில் விசால மடைந்தது. பலரும் இதை அறிந்தார்கள். முத்துசுவாமி சென்ற இடங்களிலெல்லாம் அவன் பெயர் பொலிவுற்று விளங்கிற்று. "குப்பையில் கிடந்தாலும் மாணிக்கம் மாணிக்கமன்றே."? அவன்ஏழைக்குடியில்பிறந்தபோதிலும், ஏழை என்று ஏளனஞ் செய்யப்படாமல் கண்டோர் அனைவரும் மரியாதையுடன், "முத்துசுவாமி ஐயர்," என்று கௌரவமாக அழைக்க ஆரம்பித்தார்கள். பெரியோர் பழக்கமும் அவ

ருக்கு ஏற்பட்டது. அவர் கொஞ்சகாலம் உபாத்தியாயராக இருந்தார். அவருடைய முன் மாதிரியை மாணவர் பின்பற்ற ஆவல் கொண்டனர். பிறகு கலெக்டர் ஆபீஸில் ஒரு குமஸ்தாவாக அவர் எடுத்துக் கொள்ளப்பட்டார். இங்கேயும் சோம்பலின்றி தனக்கு ஏற்பட்டவேலைகளைச் செவ்வனே செய்து வந்தார். அவருடைய வேலைத் திறமையைக் கண்டு அவரை முன்சீப்பாக நியமித்தார்கள். நியாய பரிபாலனத்திலும், அவருக்கு விசேஷ திறமை உண்டு என்பதை தன் சாமர்த்தியத்தால் வெளியாக்கிக் கொண்டார். சட்ட நிபுணர் என்ற பெயரும் பெற்றார். வரவர உத்தியோகத்திலும் ஒன்றன் பின் ஒன்றாய் உயர்ந்து, கடைசியாக சென்னை பிரதம நீதிபதியாகவும் நியமனம் செய்யப்பட்டார். இவ்வளவு உயர்ந்த பதவிக்கு வந்தும், தற்பெருமை என்பது சிறிதும் இல்லாமல் பெருந்தன்மையையே பூஷணமாகக் கொண்டிருந்தார். ஆனல் கவன்மெண்டார் அவருடைய மேன்மையைக் கருதி அவருக்கு, "ஸர்", என்ற பட்டத்தையும் அளித்தார்கள். மேலும் அவருடைய ஞாபகார்த்தமாக அவரது பதுமை ஒன்று சென்னை நீதிஸ்தலத்தில் இன்றும் வைக்கப்பட்டிருக்கிறது. அதன் முன்னிலையில் யார் சென்றாலும் அதை வணங்காமலிரார்.

ஏழைக்குடியில் பிறந்த முத்துசுவாமி ஐயர் இவ்வளவு உயர்பதவிக்கு வரக்காரணமென்ன? சிறுவயதிலிருந்து அவர் கைக்கொண்ட நற்பழக்கங்களே அதற்குக் காரணம். அப் பழக்கங்கள் யாவுக்கும் அடிப்படையாய் நின்றது, அதிகாலையில் படுக்கையை விட்டெழுந்திருக்கும் வழக்கத்தைத் தவிர வேறில்லை. ஆகையால் நாம் ஒவ்வொருவரும் அதிகாலையில் எழுந்திருந்து, அவரவர் வேலைகளைச் சரிவரச் செய்யப் பழகவேண்டும்.

---

2. ஆவலுடன் கடவுளைப்பணி.

நாம் நேரில்காணும் தெய்வங்கள் அன்னையும் பிதாவுமே. அவர்கள் நமக்குச் செய்திருக்கும் நன்மைகள் அளவில. நாம் அவர்களுக்குப் பலவிதத்திலும் பணிவிடை செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். பூமியிலுள்ள சகல ஜீவராசிகளையும், மற்றுமுள்ள எல்லாப் பொருள்களையும் படைத்தவர் ஒருவர் உண்டு. அவரே ஆக்கவும் அழிக்கவும் சக்தி யுள்ளவர். அவரைத்தான் நாம் கடவுள் என்றழைக்கிறோம். அவருக்கு ஆதியுமில்லை, அந்தமு மில்லை. அவரை நாம் நேரில் காண்பதரிது. நாம் அவரைக் காணமுடியாவிடினும், அவர் நம்மை இடைவிடாமல் பாதுகாத்துக் கொண்டிருக்கிறார். நம்மேல் கருணை

கூர்ந்து, உயிர்வாழ்க்கைக்கு வேண்டிய உணவுப் பொருள்களை யெல்லாம் தயவுடன் கொடுத்துக் கொண் டிருக்கிறார். நாம் எல்லோரும் அவரது குழந்தைகள். அவர் நமக்குப் பரம பிதா. நாம் நமது தாய் தந்தையருக்கு நன்றி பாராட்டக் கட மைப்பட்டிருப்பது போல் கடவுளையும், மனம், மொழி, மெய்களால் வணங்கக் கடமைப்பட்டிருக் கிறோம்.

கடவுளை உண்மையான உள்ளன்புடன் வண ங்கி வந்தால் எந்தக் காரியத்திலும் சித்திபெறலாம். ஆவலுடன் கடவுளைப் பணிபவருக்கு எல்லாவித செல்வமும், அழியாப்புகழும், அரிய தீர்க்காயு ளும் கிடைக்கும்.

தஞ்சை ஜில்லாவில், திருக்கடையூர் என்ற சிவஸ்தலம் இருக்கிறது. அவ்வூரில் அனேக வருஷங்களுக்கு முன் மிருகண்டு என்ற பெரியார் ஒருவர் இருந்தார். அவர் மிகவும் தெய்வ பக்தி யுள்ளவர். அவருக்கு எல்லாவித பாக்கியங்களு மிருந்தும், புத்திர பாக்கியம் மாத்திரம் இல்லாம லிருந்தது. அதனால் மனக்கவலை யுற்றிருந்தார். கடவுளை மிகத்தீவிரமாகத் தியானித்தார். கடவுள் அவரது பக்தியை மெச்சி அவர் முன் தோன்றி னர். மிருகண்டு மிக ஆனந்தங் கொண்டார். சாஷ் டாங்கமாக நமஸ்கரித்து, தன் குறையைக் கூறினர். கடவுள் மனமிரங்கி, " அன்பா, உனக்கு நூறு

வயதுள்ள துஷ்டப் பிள்ளைகள் பலர் வேண்டுமா, அல்லது பதினறு வயதுள்ள சத்புத்திரன் ஒருவன் வேண்டுமா"? என்று கேட்டார். அதற்கு மிருகண்டு, "சுவாமி! பதினறு வயதுள்ள சத்புத்திரன் ஒருவனே போதும்," என்றார். கடவுளும், அப்படியே தந்தேன் என்று சொல்லி மறைந்தார்.


சில நாட்கள் சென்ற பிறகு, மிருகண்டுவுக்கு ஒரு அழகிய ஆண் குழந்தை பிறந்தது. குழந்தையைக் கண்ணுற்ற பெற்றோருக்கு உண்டான ஆனந்தத்திற்கு அளவே இல்லை. அவர்கள் மனம் பூரித்தது. குழந்தையை, 'மார்க்கண்டன்' என்றழைத்தனர். அவனை மிகவும் செல்வமாக வளர்த்து வந்தனர்.மார்க்கண்டன் சிறுவனாயிருந்த பொழுது பகவானைத் தியானம் செய்வதில் பிரேமை கொண்டான். ஆயுள் பதினறு வருஷங்கள் தான் என்பதைத் தன் தாய்தந்தையரிடமிருந்து அறிந்து கொண்டான். அதற்குள், சகல சிவஸ்தலங்களுக்குஞ் சென்று சுவாமி தரிசனம் செய்ய வேண்டுமென்ற எண்ணங் கொண்டான். தன் பெற்றோரிடம் விடை பெற்றுக்கொண்டு, யாத்திரைக்குப் புறப்பட்டான்.

சில வருஷங்கள் தேச யாத்திரை செய்தான். உள்ளன்போடு கடவுளைப் பூஜித்து, அவருடைய பூர்ண அனுக்கிரகமும் பெற்றுத் திருக்கடையூருக்குத் திரும்ப வந்து சேர்ந்தான். அத்துடன் அவ

னுடைய ஆயுட்கலாமும் நெருங்கிற்று. ஆயுட் காலம் நெருங்கவே பக்தியும் அதிகரித்தது. பசி தாக மில்லாமல் பூஜையில் அமர்ந்தான். மனதை ஒரே நிலையாகக் கடவுளின்மேல் நாட்டினான். பல விதமாக ஸ்தோத்திரங்கள் செய்தான். கடவுள் அவனுக்கு அன்பு வடிவாகத் தோன்றினர். அத் தருவாயில், யமன் மார்க்கண்டன் உயிரைக்கொண்டு போவதற்கு எதிர்ப்பட்டான். யமனைக் கண்டதும் மார்க்கண்டன் பயந்து கடவுளைத் தழுவிக் கட்டிக் கொண்டான். "கடவுளை நம்பினோர் கைவிடப் படார்." என்று நம்பி, அவரையே தஞ்சமென்று அடைந்தான்.

யமன் கோபித்து, பாசக்கயிற்றை அவன் கழுத்தில் வீசினான். ஆனால் மார்க்கண்டன் சிவ லிங்கத்தைத் தழுவிக்கொண்டிருந்தமையால், பாசக் கயிறு லிங்கத்தையும் சேர்த்துச் சுற்றி யிழுத்தது. கடவுள் கருணை நிதியல்லவா? தஞ்சமென்றடைந் தோரைக் காப்பாற்றாது கைவிட்டு விடுவாரோ?

யமன் இருவரையும் சேர்த்து இழுக்கவே, கடவுள் யமன் முன் உக்கிரத்தோடு தோன்றி அவனை உதைத்துத் தள்ளினர். அதனால் அவ ருக்கு காலகாலன் என்ற பெயரும் ஏற்பட் டது. அவர் மார்க்கண்டன் பக்தியை மெச்சி னர். அவனுக்கு, "என்றும் பதினறு வயது" என்ற வாத்தையும் அளித்தார். மார்க்கண்டன்



கடவுள் யமன் முன் உக்கிரத்தோடு தோன்றினர்.

அன்று முதல் எப்பொழுதும் சுவாமியைத் தியானம் செய்து கொண்டு வருகிறான். அவனுக்கு என்றும் பதினாறு வயதல்லவா? பிள்ளைகளே, நீங்கள் ஒவ்வொருவரும் மார்க்கண்டனைப் போல் கடவுள் பக்தியில் ஆவலுடன் ஈடுபட்டால், என்றும் அழியாத இன்பத்தையும், தீர்க்காயுளையும் அடையலாம்.

---


3. இன்று செய்வதை இன்றே செய்.

நாம் எந்தக் காரியத்தையும் எப்பொழுது செய்துமுடிக்கவேண்டுமோ, அப்பொழுதேசெய்து முடிக்க வேண்டும். தவறினால், பலவித நஷ்டங்களுக்கிடையாகும். பொருள் நஷ்டமும், நீங்காப் பழியும், பாபமும் உண்டாகின்றன. அதோடு நிர்க்காமல், உயிர்ச்சேதமும், அதனால் உண்டாகின்றது. அஜாக்கிரதையாலும், சோம்பேறித்தனத்தாலும், நாம் நமது வேலைகளைக் காலாகாலத்தில் செய்யாதொழிகின்றோம். கால தாமதத்தால், கைக்கெட்டினது வாய்க்கெட்டாமல் போன ஒரு கதையை இங்கே எடுத்துரைப்போம்.

அனேக வருஷங்களுக்கு முன், ஒருவன் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டான். அவன் செய்தகுற்றம் தூக்குத்தண்டனை விதிக்கும்படி அவ்வளவு பெரியது அன்று. என்றாலும், சாக்ஷிகள் அவனுக்கு நேர் எதிராக இருந்தமையால் அவ

னுக்கு அத் தண்டனை விதிக்கப்பட்டது. அவ்வூர் அரசன் அதை அறிந்து அந்த ஏழையின் பேரில் கிருபை கூர்ந்து, தன் சேவகனிடம் ஓர் கடிதத் தைக் கொடுத்து, "வெகு விரைவில் இதைக் கொண்டு போய் அதிகாரிகளிடம் கொடுத்து, ஏழை மனிதனைத் தூக்கிலிடாம லிருக்கும்படி செய்", என்று சொல்லி யனுப்பினர். சேவகனும் கடிதத் தை வாங்கிக் கொண்டு, ஓர் விரைவான குதிரை மேல் ஏறி, அதிசீக்கிரம் தான் நினைத்த இடம் போய்ச் சேரவேண்டுமென்ற எண்ணத்துடன் புறப்பட்டடான். அவன் கொஞ்ச தூரம் வந்ததும் சோலையின் நிழலைக் கண்டு ஓர்மரத்தடியில் குதிரை யைக் கட்டிவிட்டு, நிழலில் உட்கார்ந்து, அச் சோலையின் அழகை உற்றுநோக்கி, வீண் காலம் போக்கினான். பிறகு கீழே படுத்தான். படுத்தவன் அயர்ந்து நித்திரை செய்து விட்டான். அவன் நித்திரை செய்து கொண்டிருந்த சமயம், திடீ ரென்று காற்றும், இடியும், மின்னலும் ஏற்பட் டது. இடிமுழக்கத்தைக் கேட்டு குதிரை வெரு ண்டு, கட்டிய கயிற்றை அறுத்துக் கொண்டு விரை வாய்த் துள்ளி ஓட ஆரம்பித்தது. சேவகன் கண் விழித்துப் பார்த்து, குதிரையைப் பிடிக்கத் தானும் ஓடினான். இது நிற்க.

தூக்கிடு மிடத்தில் அதிகாரிகள் சூழ்ந்து கொண்டு, குற்றவாளியைத் தூக்கி லிடுவதற்குவேண்



படுத்தவன் அயர்ந்து நித்திரை செய்துவிட்டான்.

டிய ஏற்பாடுகளைச் செய்துகொண் டிருந்தார்கள். குற்றவாளி தூக்கு மரத்தின் அருகில் நிறுத்தப் பட்டிருந்தான். அவனைத் தூக்கிலிட மற்ற ஏற்பாடு களெல்லாம் செய்யப்பட்டுத் தயாராக இருந்தன. அதிகாரிகள் அரசனிடமிருந்து ஏதாவது நிரூ பம் வருகிறதா என்பதை எதிர்பார்த்துக்கொண் டிருந்தார்கள். ஏனென்றால், காலை பத்துமணிக் குள் அரசனிடமிருந்து கடிதம் ஒன்றும் வராவிட் டால், குற்றவாளியைத் தூக்கிலிடுவதற்கு அரச னும் சம்மதித்து விட்டான் என்பது கருத்து. மணி யும் ஒன்பது ஐம்பது ஆய்விட்டது. ஒவ்வொரு வரும் வெகு ஆவலுடனும் பரபரப்புடனும் அர சன் உத்தரவை எதிர்பார்த்துக்கொண் டிருந்தார் கள். கடிகாரமும் ஓடிக்கொண்டே யிருந்தது. நிரூ பத்தைக் காணோம். மணியும் ஒன்பது ஐம்பத் தெட்டாயிற்று. உத்திரவொன்றையும் காணோம். குற்றவாளி தூக்கு மரத்தில் ஏற்றப்பட்டான். எல் லோரும் ஏழையைக் கண்டு கண்ணீர் விட்டுக் கொண்டுமௌனமாக நின்றார்கள். சரியாக மணி பத்து அடித்ததும் குற்றவாளி தூக்கில் இடப்பட் டான். அந்தோ! பரிதாபம்!!

இரண்டு நிமிஷத்திற்கெல்லாம் ஒரு குதிரை யின் காலடி ஓசை கேட்டது. ஒரு குதிரைவீரன் தன் கையில் ஒரு கடிதத்துடன் ஒரே பாய்ச்சலாய் வந்தான். கடிதத்தை பிரதானியிடம் நீட்டினான்.

பிரதானி அதை பிரித்துப் பார்த்து மிகத் துக்க மடைந்தார். என்ன செய்வது. 'கைக் கெட்டியது வாய்க் கெட்டவில்லை.' கரைகடந்த வெள்ளம் கதறினாலும் வருமா?

காரியமெல்லாம் முடிந்தாய் விட்டது. சேவகன் எவ்வளவு விரைவாய் வந்தும், சமயத்திற்கு வந்து சேர முடியவில்லை. ஓர் உயிர் வீணாக வாங்கப்பட்டது. வழியில் தங்காமல் நேராக வந்திருந்தால் இம்மாதிரி நடந்திருக்குமா? பிள்ளைகளே! சோம்பேரித்தனத்தால் உண்டாகும் கெடுதியைப் பார்த்தீர்களா? நீங்கள் இதை மறவாமல் மனதில் வைத்துக் கொள்ளுங்கள். இந்த நிமிஷம் செய்யவேண்டியதை மறுநிஷம் செய்து கொள்ளுவோம் என்று தள்ளிவைப்பதே உயிர் நஷ்டத்திற்குக் காரணமாயின், இன்று செய்ய வேண்டியதை நாளை என்று நாம் மெத்தனமாயிருந்தால், எவ்வளவு தீங்கை விளைவிக்கும் என்பதை நீங்களே ஊகித்து அறிந்துக்கொள்ளுங்கள்.

---

4. ஈனத்தொழிலைச் செய்யாதே.

காதல், கவருடல், கள்ளுண்டல், பொய் மொழிதல், ஈதல் மறுத்தல் இவை ஐந்தும் ஈனத் தொழில்கள் என்று அறிய வேண்டும்.

காதலினால் இராவணன் அழிந்தான். இராவணனே இலங்கைக்கு அரசன். அவனுக்கு எவ்வளவோ ஐசுவரியமும், பலமும் இருந்தும், அவனது சகோதரனும், நண்பர்களும் எவ்வளவோ புத்திமதி சொல்லியும் கேளாததனால், விளக்குப் பூச்சி சுடரில் விழுந்து மாய்வது போல், சீதையாகிய சுடரின் மீது மயக்கங்கொண்டு, அதன் காரணமாக போரில் உயிரையும் இழந்தான். ஆகையால், நாம் பிறர் பொருளில் ஆசை வைக்கலாகாது.

கவருடல், அல்லது சூதாட்டத்தினால் நள மகாராஜன் தன் நாட்டையும் நகரத்தையும் இழந்தான். தன் மனைவி தமயந்தியுடன் இருள் அடர்ந்த கானகத்திற் கேகினான். அங்கே அவள் அடைந்த கஷ்டத்தைக் கண்டு சகிக்க முடியாமல் மனம் வாடி, அவளை விட்டுப் பிரிந்தான். தமயந்தி, வேறு கதியில்லாமல் தன்தகப்பன் வீட்டை அடைந்தாள். நளனும் வேற்றரசனிடம் வேலைக்கு அமர்ந்தான். இதெல்லாம் சூதாட்டத்தினால் ஏற்பட்ட கேடுகள் அல்லவா?

இன்னும், பஞ்சபாண்டவர்கள் வனவாஸம் செய்தது எதனால் ஏற்பட்டது? எல்லாம் சகுனி மாமனின் சூழ்ச்சியாலன்றோ? அவன் எவ்வளவோ உத்தம குணமுடைய தருமரையும் வீண் யாட்டாக சூதாட்டத்தில் இழுத்து, அவரைத் தன்

வலையில் சிக்கும்படி செய்து கொண்டானே! ஆகை யால், விளையாட்டுக்குக்கூட சூதாடலாகாது.

சூதாட்டத்தினால், பல துர்ப்பழக்கங்கள் நம் மிடம் குடிகொள்ளுகின்றன. விளையாட்டாகவே காலம் வீணுக்கப்படுகிறது. பணம் விரயமாகிறது. ஒருவரை யொருவர் மோசஞ் செய்யக் கற்றுக் கொள்ளுகிறார்கள். தமக்கும் பிறருக்கும் ஆபத் தையும் மோசத்தையும் வருவித்துக் கொள்ளுகிறார் கள். துர்ப்பழக்கங்கள் ஒன்றன்பின் ஒன்றாய் நம் மைச் சூழ்ந்து கொள்ளுகின்றன. ஆகையால் விளையாட்டுக்காகவும் சூதாடலாகாது.

கள் குடிப்பதனால் விளையும் கேடுகள் பல. குடி ஒருவனிடம் குடியேறிவிட்டால், அவனைச் சீர் குலையச் செய்து விடும். அவன் சொத்தை இழக் கிறான். சுகத்தை ஒழித்துக் கொள்ளுகிறான். மதியை இழக்கிறான். மதிப்பையும் கெடுத்துக் கொள்ளுகிறான். இதை விளக்க ஓர் கதையை இங்கே எடுத்துரைப்போம்.

ஓர் ஊரில் தனவான் ஒருவன் இருந்தான். அவனுக்கு ஒரே புதல்வன். அப் புதல்வனை மிக வும் பிரியமுடன் வளர்த்து வந்தான். அவன் விளையாட்டிலேயே காலங்கழித்து வந்தான். அவ னுக்கு துஷ்டர் சகவாஸம் அதிகரித்தது. தகப் பன் இதைக் கவனிக்கவில்லை.

சில நாட்கள் சென்ற பின், தகப்பன் இறந்து போனான். சிறுவனும் வயதில் பெரியவனானான். ஆனால் புத்தியில் சிறியவனாகவே இருந்தான். ஏனெனில், அவன் சிறுவனாயிருக்கையில் நல்ல அறிவைச் சம்பாதித்துக் கொள்ளவில்லை. அவனிடம் துர்ப்பழக்கங்கள் குடிகொண்டன. குடிக்கும் வழக்கமும் அவனிடம் ஏற்பட்டது. அதனால் சுய புத்தியையும் இழந்தான். பொருளையும் பறிகொடுத்தான். கொஞ்ச நாளில் அவனுடைய சொத்தெல்லாம் நீரில் உப்புக்கரைவதுபோல் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போயிற்று. குடிக்கும் பழக்கமோ அவனை விட்டுப் பிரியவில்லை. கெட்டியாய் பிடித்துக்கொண்டது. என்ன செய்வான். குடிக்கக் காசுமில்லாமலாயிற்று. சம்பாதிக்க வழியும் தெரியவில்லை. படிப்பும் இல்லை. அவனை எல்லோரும் வெறுத்தார்கள். எந்த விதத்தில் காசு சம்பாதிப்பது என்று ஆலோசித்தான். யாதொரு வழியும் புலப்படவில்லை. தயங்கினான். பின்னும் ஆலோசித்தான். கடைசியில் திருடுவதுதான் நலம் என்று கருதினான். தன் கருத்தை நிறைவேற்றவும் எண்ணங் கொண்டான். வெளியே சென்றான். வெளியில் அயல் வீட்டுக் குழந்தை ஆபரணங்கள் அணிந்து விளையாடிக் கொண்டிருந்தது. குடிகாரன் அருகில் சென்றான். ஏதோ கொடுப்பது போல் ஜாடை காட்டி அக்

குழந்தையை விரைவில் தூக்கிக்கொண்டு ஓடினான். அரை மைலுக்கப்பாலுள்ள ஓர் அடர்ந்த ஆல மரத்தடியில் சென்று குழந்தை மூச்சைப் பிடித்துக் கொன்றான். ஆலமரத்தில் இலை பறித்துக் கொண் டிருந்த இருவர் அதைக்கண்டு கீழே இறங்கி வந்து, குடிகாரனைப் பிடித்துக் கொண்டார்கள். போலீஸ்காரரிடம் அவனை ஒப்படைத்தார்கள். கடைசியில் அவன் பழிக்குப்பழி வாங்கப்பட் டான்.

பிறப்பில் ஐசுவரியவானாகப் பிறந்து, அதி லேயே வளர்ந்து, கொஞ்ச நாளில் கஞ்சிக்குக்கூட விதியில்லாமல் ஆனதைப் பார்த்தீர்களா? நல்ல குடியில் பிறந்தவனை நல்ல நிலைமையில் இருக்க ஒட்டாமல் செய்தது எது? இக்கொடிய குடி யன்றோ?

கள், சாராயம், இவைகள் உடலுக்கு நன்மை யெனக் கருதி, சிலர் குடிக்கிறார்கள். அவை விஷ மாதலால், நாளடைவில் உடலைக் கெடுத்துவிடு கிறது. மதுபானத்தால் பல நோய்கள் உண்டா கின்றன. இரத்தாசயமும், சுவாஸகோசமும் கெட் டுப்போகின்றன. உடலின் பலத்தையும் உற்சாகத் தையும் கெடுத்துவிடுகிறது. குடும்பத்தை வறுமை நோய்க்கு உள்ளாக்குகிறது. ஆகையால் மக்கள் இக்கொடிய பழக்கத்திற்கு ஆளாகாமல் இருக்க வேண்டும்.

பொய் மொழிதல். ஒரு பொய் கூறினால் அதை மறைக்க ஒன்பது பொய் கூறவேண்டும். பொய் சொல்லுவதால் அதன் தோழர்களாகிய மற்ற கெட்ட குணங்களெல்லாம் தானாகவே பின் தொடர்ந்துவரும். பயம், கோபம், கடுஞ்சொல், திருட்டுத்தனம் இவைகளெல்லாம் அதன் தோழராகும். "பொய் சொல்லி வாழ்ந்தவனுமில்லை, மெய் சொல்லிக் கெட்டவனுமில்லை," எனக் கூறுவர் பெரியோர்.

ஓர் ஊரில் இரண்டு தனிகர்கள் இருந்தார்கள். அவர்கள் வீட்டிற்கு ஒரு பொய்யன் அடிக்கடி போய்க்கொண்டு வந்தான். இருவர் வீட்டில் நடக்கும் விஷயங்களையும், பொய்யும் மெய்யுமாய் கலந்து, அங்குமிங்கும் கோள் சொல்லிக்கொண்டு வந்தான். அதனால் இருவருக்கும் விரோதம் ஏற்பட்டது. நாளுக்குநாள் விரோதம் முற்றிக்கொண்டு வந்தது. கடைசியில், ஒரு நாள், இருவரும் ஒருவரை ஒருவர் சந்திக்க நேர்ந்தது. இருவரும் கோபக்குறியுடன் பார்த்துக் கொண்டார்கள். சற்று நேரம் கழிந்து, கோபத்தைத் தன்னுள் அடக்கிக் கொண்டு, அவதூராகப் பேசியதன் காரணம் என்ன வென்று வினவிக் கொண்டார்கள். அப்பொழுது உண்மை விளங்கிற்று. பொய்யன் அகப்பட்டுக் கொண்டான். எல்லோராலும் நிந்திக்கப்பட்டான். தலைகுனிந்து வெட்கம் அடைந்தான்.

அவ்வூரிலிருந்தால் இனிமேல் காலங்கழிக்க முடியாதென்று எண்ணி ஊரைவிட்டு ஓடிவிட்டான். இதனால் பொய்யனை ஒருவரும் நம்பமாட்டார்கள் என்று தெரிகிறதல்லவா?

மெய்யின் மேன்மையை விளக்க ஒரு கதை உண்டு. அரிச்சந்திர மகாராஜன் சத்தியத்தைக் காக்கும் பொருட்டு என்னென்ன கஷ்டங்களை அனுபவித்தான். நாட்டை இழந்தான். மனைவியையும் குழந்தையையும் விற்றான். தானும் சண்டாளனுக்கு அடிமையானான். எல்லாத் துன்பங்களையும் பொறுமையுடன் சகித்துக்கொண்டிருந்தான். இது எதற்காக என்று சற்று யோசியுங்கள்? சத்தியத்தைக் காக்கும் பொருட்டன்றோ? என்ன கஷ்டம் நேர்ந்தபோதிலும் பொய் பேசவே கூடாதென்ற உறுதியான எண்ணத்தை அவன் கைக்கொண்டிருந்ததால், அரிச்சந்திரன், மாற்றறியாத செழும்பசும் பொன்போல் யாவராலும் போற்றப்பட்டு விளங்கினான். சத்தியத்தில் ஜயமடைந்தான். தெய்வ கிருபையால், தான் இழந்த நாட்டையும் நகரத்தையும் திரும்பப் பெற்றான். தேவர்கள் யாவராலும் போற்றப் பெற்றான். என்றும் அழியாத கீர்த்தியையும் பெற்றான். சக்கரவர்த்தியாக நெடுநாள் அரசு புரிந்து, குடிகளைக் காப்பாற்றினான். சத்தியத்திற்கு அரிச்சந்திரனையே ஒரு உபமானமாக இன்றும் சொல்லுகிறார்கள். "சத்தி

யம் தலைகாக்கும்," என்பது உண்மையே. ஆதலால், பொய்யைக் கனவிலும் கருதலாகாது.

ஈதல் மறுத்தல். ஔவை பிராட்டியார் ஆரம்பிக்கும் பொழுதே, "அறஞ்செய விரும்பு," என்று சொல்லியிருக்கிறாள். ஏனெனில், "தருமம் தலைகாக்கும்." ஒவ்வொருவனும் தருமம் செய்ய விரும்ப வேண்டும். இரக்கம் இருப்பவனுக்கே, தருமம் செய்ய விருப்பமும் இருக்கும். ஆதலால், ஈகைக்குண மில்லாதவன், இரக்கமற்றவன் என்று திட்டமாகச் சொல்லலாம். ஆனால், ஈகைக்குணமும் இல்லாமல், ஈதலை மறுக்குங்குணமும் ஒருவனுக்கு இருந்தால் அவனை என்ன வென்று உரைப்பது?

மஹாவிஷ்ணு, வாமனவதாரம் எடுத்து மகாபலிச் சக்கரவர்த்தியிடம் வந்து, மூன்றடி மண் தேவை என்று கேட்டார். சக்கரவர்த்தியின் குல குருவாகிய சுச்கிராசாரியார் கொடுக்கக் கூடாது என்று தடுத்தார். சக்ரவர்த்தி உண்மையை அறியாது, மூன்றடி மண்தானே என்று, "கொடுக்கிறேன்," என்று வாக்களித்துவிட்டார். ஈதலை எப்படியாவது தடுத்து விடவேண்டு மென்று, ஆசாரியார் ஒரு வண்டுரூபம் எடுத்து, சக்கரவர்த்தி, கெண்டியில் ஜலமும் கையில் துளஸியும் எடுத்துக்கொண்டு, விஷ்ணுவுக்கு மூன்றடி மண் தத்தம் செய்யப்போகும் சமயத்தில், நீர் விழவொட்டா

மல்,கெண்டியின் துவாரத்தை அடைத்துக் கொண்டார். இதை அறிந்த மஹாவிஷ்ணு ஒரு தருப்பப்புல்லை எடுத்துத் துவாரத்தில் குத்த, அது வண்டாகிய சுக்கிராசாரியரின் கண்ணைக் குத்திவிட்டது. ஆகையால் அவருக்கு ஒரு கண் குருடாய் விட்டது. ஆசாரியாரின் எண்ணமும் பலிக்க வில்லை. ஆகையால் ஈதல் மறுத்தலினுல் ஏற்பட்ட தீமையைக் கவனியுங்கள்.

---

5. உன்னதமான நோக்கங் கொள்.

எல்லா ஜன்மங்களிலும் மேலானது மானிட ஜன்மமே! அப்படிப்பட்ட உன்னதமான ஜன்மத்தை நாம் அடைந்திருக்கிறோம். அதை நாம் எப்படிக் கழிப்பது? ஆடல் பாடலிலா, அல்லது வேடிக்கை வினோயாட்டிலா?

எல்லா ஜீவராசிகளும், நம்மைப்போல் கடவுளால் படைக்கப்பட்டிருக்கின்றன. நம்மைப் போல் அவைகளுக்கும் சுகமும் துக்கமும் உண்டு. நமக்கு துக்கம் ஏற்பட்ட காலத்தில், நாம் ஒருவருக்கொருவர் தேருதல் சொல்லிக்கொண்டால், நமது மனம் எப்படி சாந்தமடைகிறதோ அதே போல், அவைகளுடைய துக்கங்களில் நாமும் அனுதாபம் கொண்டு அவைகளுடைய மனதைச் சாந்தப் படுத்துவதற்கு என்னென்ன வகைகளுண்டோ, அவைகளை மனப்பூர்வமாய்ச் செய்ய

வேண்டும். உயர்ந்தவன், தாழ்ந்தவன், ஏழை, பணக்காரன் என்று பிரித்து வைக்காமல், எல்லோருக்கும் ஒன்று போலவே நாம் உதவி புரிய வேண்டும். ஏனெனில் எல்லோருக்கும் இன்ப துன்பங்கள் ஒன்றே. ஒரு தாய், தன் இரு குழந்தைகளை எவ்விதம் ஒரே மனதுடன் அன்பு பாராட்டி வருகிறாளோ, அதே மாதிரியாக கடவுளும் தான் படைத்த எல்லா ஜீவராசிகளையும் ஒரு மனதுடன் பாதுகாத்து வருகிறார். கடவுளுக்கு நல்ல பிள்ளைகளாக இருக்க வேண்டுமானால், ஜீவகாருண்யம் என்பது வேண்டும். இந்த ஒரு குணம் மாத்திரம் ஒருவனுக்கிருந்தால், மற்ற நற்குணங்களெல்லாம் தானாகவே பின் தொடர்ந்துவரும் என்பதற்குச் சந்தேகமில்லை. அவன் கடவுளாலும் மதிக்கப்படுவான்.

முன் ஒரு காலத்தில், ஏழை ஒருவன் இருந்தான். அவன் அதிகாலையிலெழுந்து, காலைக்கடன்களை முடித்து, ஸ்நானஞ் செய்து விட்டு வெளியே செல்லுவான். ஊரில் எங்கும் சுற்றித் திரிந்து தன்னால் யாருக்காவது உபகாரம் செய்யக்கூடுமா என்று பார்ப்பான். எந்த ஜாதியாயிருந்தாலும் சரி, ஏழையாயினும் பணக்காரனாயினும், ரோகியாயினும் அரோகியாயினும், கொஞ்சமேனும் கூசாமல்ச் சென்று, அவனுக்கு உபகாரம் செய்வது வழக்கம்.

இவ்விதம் நெடுநாள் உபகாரம் செய்து கொண்டு வந்தான். ஒரு நாள் சாயங்காலம் அஸ்தமிக்குந் தருவாயில், அவன் தன் வீட்டில் ஓர் அறையில் உட்கார்ந்து கொண்டிருந்தான். அவ்வறையின் வெளிப்பக்கத்திலிருந்து ஒரு பிரகாசம் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்துக்கொண்டே வந்தது. ஆனல் அவனுக்கு அது என்ன வென்று புலப்படவில்லை. பிரகாசம் அதிகரிக்கவே, மிக ஒளியோடு கூடிய ஒரு மனித உருவம் தோன்ற ஆரம்பித்தது. கொஞ்ச நேரத்திற்கெல்லாம் கிட்ட நெருங்கி எதிரில் வந்து நின்றது. ஏழை மனிதனுக்கு உண்டான ஆச்சரியத்திற்கு அளவே இல்லை. அவனுக்கு இன்னது செய்வது என்று ஒன்றும் புலப்படவில்லை. ஆனலும், தைரியத்தைக் கைவிடாமல், எழுந்திருந்து நின்று, கைகளைக் கூப்பிக்கொண்டு, "சுவாமி, நீங்கள் யார்" என்று சொல்லி வணங்கி நின்றான்.

இதைக் கேட்டதும் வந்த உருவம் அவனை நோக்கி, புன்சிரிப்புடன், "அப்பா, நான் தேவ தூதன்" என்றது.

தேவதூதன் தன்கையில் ஓர் தங்கப் புஸ்தகம் வைத்துக்கொண்டிருந்தபடியால், அதைப்பார்த்து ஏழை மனிதன், "தேவரீர் கையில் வைத்துக் கொண்டிருப்பது யாதோ" என்றான்.



எழுபது தலைக்கு உண்டான ஆச்சரியத்திற்கு எல்லையே இல்லை

அதற்கு தேவதூதன், "இது தங்கப் புஸ்தகம். இதில் கடவுள் கட்டளைப்படி, கடவுளால் நேசிக்கப்பட்ட ஒவ்வொரு மனிதனின் பெயரையும் குறித்துக்கொண்டு வருகிறேன்" என்றான். அதைக் கேட்ட ஏழை மனிதன், மிக ஆவலுடனும், பயபக்தியுடனும், ஐயா, என் பெயர் குறிக்கப்பட்டிருக்கிறதா"?, என்றான்.

அதற்கு தேவதூதன் பதிலொன்றும் கூறாமல் கையால் இல்லை என்று ஜாடை செய்துவிட்டு, மறைந்து விட்டான்.

ஏழை மனிதனுக்குண்டான துக்கத்திற்கு அளவே இல்லை. பலவிதமாக நினைத்தான்.

"ஆஹா! தினந்தோறும் கோவில்குளங்களுக்குச் சென்று கடவுளை ஸ்தோத்திரம் செய்யாததனால்தான் கடவுளால் நான் நேசிக்கப்படவில்லையோ? தினந்தோறும் கோவிலுக்குப் போகாவிட்டாலும், கடவுளுடைய அம்சமாகிய ஜீவராசிகளை நேசிப்பது, கடவுளை நேசிப்பதற்குச் சமானமன்றோ? கடவுளை அன்பு வடிவன்றோ? நாம் ஜீவன் எடுத்ததற்கு அழகு மற்ற ஜீவன்களின் இடையூறுகளை நீக்குதலன்றோ? நான் தற்காலம் செய்துவரும் பொதுஜன ஊழியம் கடவுளால் நேசிக்கப்படும் காரியமென்றே மனப்பூர்வமாய் எண்ணுகிறேன். ஆகையால், தினந்தோறும் நான் இதுவரை செய்து வந்ததுபோல், ஒழுங்

காய் இனிமேலும் பொது ஜன ஊழியம் செய்து வருவேன். கடவுளது நேசத்திற்குப் பாத்திரனு வேன். இது நிச்சயம்," என்று தனக்குள் சொல் லிக் கொண்டான்.

அடுத்தநாள் வழக்கம்போல், ஏழை மனிதன் தன் வீட்டில் இளைப்பாறிக் கொண்டிருந்த பொழுது, தேவதூதன் தங்கப் புஸ்தகத்துடன் தோன்றினான். அப்பொழுது அவ்வேழை பய பக்தியுடன் துதித்து நின்று, 'ஐயா, என் பெயர் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறதா'? என்றான். அதற்கு தேவதூதன், புஸ்தகத்தின் முதல் பக் கத்தை விரித்துக் காட்டினான். அதில் முதன்மை யாக, தங்க எழுத்தில், மிகப் பெரிதாக, "ஆபோ பன் ஆடம்" என்று அவன் பெயர் குறிக்கப்பட்டி ருந்தது. ஆபோபன் ஆடம் மிகச் சந்தோஷ மடைந்தார். "ஜீவகாருண்யத்தின் மகிமையை இன்றுதான் கண்டுகொண்டேன்," என்றார். ஆகையால் பிள்ளைகளே, நாம் எல்லோரும் ஸகல ஜீவராசிகளையும், நமது சகோதரராக நினைத்து, அன்பு பாராட்டவேண்டும்.

ஆனால், சிலர் தாங்கள் செய்ய வேண்டிய காரி யத்தை கடமையாகச் செய்யாமல், பிறரை திருப் திப்படுத்தும்பொருட்டு செய்கிறார்கள். உடம்புக் காக பால் குடிக்கவேண்டுமேயொழிய, ஊராரை மெய்ப்பிக்கப் பால் குடிப்பது நல்லதா?

சில வருஷங்களுக்குமுன் ஒரு நியாயாதிபதி இருந்தார். அவர் மிகவும் நல்லவர். கருணையுள்ளவர். எல்லோரையும் அன்புடன் ஆதரிப்பவர். அவர் வசித்திருந்த தெருவில், ஒரு ஏழை மனிதன் தன் மனைவியுடன் வசித்து வந்தான். அவன் யாசகத் தொழிலால் ஜீவனம் செய்து வந்தான். ஒரு நாள் திடீரென்று அவ்வேழைக்கு மரணம் சம்பவித்தது. அவன் மனைவி என்ன செய்வாள்! பிணத்தை அப்புறப்படுத்த வேண்டுமே!! ஏழை வீட்டிற்கு யார் வருவார்கள்? ஒருவரும் வரவில்லை. எல்லோரும் அவரவர் காரியத்தைப் பார்த்துக் கொண்டு சென்று விட்டார்கள்.

நீதிஸ்தலத்தில், நியாயாதிபதிக்கு இத்தகவல் எட்டியது. பிறர் கஷ்டத்தில் அனுதாபமுடையவராதலால், அவர் உடனே தன் வீட்டிற்குச் சென்று, உத்தியோகச் சட்டைகளைக் கழற்றி எறிந்துவிட்டு, சாதாரண உடைதரித்துக்கொண்டு, ஏழை மனிதன் வீட்டுத் திண்ணையில் வந்து உட்கார்ந்தார். அவர் திண்ணையில் வந்து உட்காரவே, அவ்வூர் கனவான்கள் ஒவ்வொருவராக அவ்வீட்டில் கூடி, சற்று நேரத்திற்கெல்லாம் ஜனங்கள் நிறைந்து விட்டார்கள். எல்லோரும் இருந்து பிணத்தை அப்புறப்படுத்தினர்கள். நியாயாதிபதி வருவதற்கு முன்னால் அக்கனவான்கள் ஏன் வரவில்லை? அவர்கள் பிறருக்குச் செய்ய வேண்டிய

கடமையை உணரவில்லை. சமயோசிதம்போல் நடந்து கொள்பவர்களாதலால், நீதிபதி வந்தது, அவர்களும் வந்தார்கள். இப்படிச் செய்வது நியாயமாகுமா? பிள்ளைகளே! நாம், பிறருடைய சுகதுக்கங்களில் அனுதாபங் காட்டவேண்டும். கூடியவரை அவர்களுக்கு உதவி புரியவும் வேண்டும். மானிட ஜன்மம் எடுத்ததின் உன்னதமான நோக்கம் இதைத் தவிர வேறில்லை. ஆகையால் நீங்கள் ஒவ்வொருவரும் ஜீவகாருண்யமுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

---

6. ஊக்கத்தோடேதையும் செய்.

நாம் எந்தக் காரியத்தைச் செய்தபோதிலும் அதை மன ஊக்கத்துடன் செய்ய வேண்டும். அந்தக் காரியம் செய்து முடிப்பதற்கு முன் இடையூறுகள் ஏதாவது வந்தால், அதைப் பாராட்டக் கூடாது. "ஊக்கமது கைவிடேல்", என்ற வாக்கியத்தை நீங்கள் படித்திருக்கிறீர்கள் அல்லவா! ஊக்கமுடைமை, ஊக்கமின்மை இவ்விரண்டின் பாகுபாடுகளை பின்வரும் கதையால் எடுத்துரைப்போம்.

ஓர் ஊரில் இரண்டு வியாபாரிகள் வசித்து வந்தார்கள். அவ்விருவரும் மிக்க நேசமுடையவராய் வாழ்ந்து வந்தனர். அவர்கள் வியாபாரத்தில் அதிக பணம் போட்டு வர்த்தகம் செய்து வந்

தனர். அவர்கள் பங்கில் ஏழு கப்பல்கள் இருந்தன. சுருங்கச் சொல்லின் அவர்களைவிட தனவான்கள் அவ்வூரில் வேறு எவரும் இல்லை என்றே சொல்லலாம்.

அப்படி யிருக்கும் நாளில், கப்பல்கள் கடலில் சென்றுகொண் டிருக்கையில், திடீரென்று புயல்காற்று ஒன்று அடிக்க ஆரம்பித்தது. மின்னலும் இடியும் வானத்தினின்றும் தோன்றின. காற்றும் வரவர அதிகரித்தது. கப்பலில் இருந்தவர் மனம் கலங்கியது. கப்பல்களை நிறுத்துவதற்கு எவ்வளவோ பிரயத்தினம் செய்தும் முடியாமற் போயிற்று. கப்பலோட்டிகளின் கைகளினின்றும் வழிதவறி விட்டது. காற்றின் போக்கில் கப்பல்களும் தள்ளப்பட்டன. அத்துடன் நிற்காமல் அவைகள் பாறைகளில் அடிபட்டு நொறுங்கிப்போயின. அவற்றிலுள்ள சாமான்களும் மனிதரும் கடலிற் கிரையாயினர் "எல்லாம் ஈசன் செயல்,"! கப்பலோட்டிகள் தங்கள் கப்பல்களைச் செலுத்த ஆரம்பித்தபொழுது இவ்விதம் நேரும் என்று கனவிலும் கருதினர்களா? நம்மாலாவது ஒன்றுமில்லை.

இச்செய்தி வியாபாரிகள் இருவருக்கும் எட்டியது. அவர்களின் மனம் புண்பட்டது. சகிக்க முடியாத மனவருத்தத்தை அடைந்தார்கள். பெரிய தனவான்களாகிய இரு வியாபாரிகளும் ஒரு

நொடியில் பரம ஏழையாயினர். "குன்றத்தனை நிதியைப் படைத்தோர் அன்றைப்பகலே அழியினும் அழிவர்", என்ற நீதி இவர்கள் விஷயத்தில் உண்மையாயிற்று. மீதியுள்ளவைகள் எல்லாம் கடனுக்கு ஈடாயின. அப்படியிருக்க,

இருவரில் ஒருவன் மனதைரியத்தைக் கைவிடாமல் "எல்லாம் தெய்வச் செயல், நம்மாலாவது ஒன்றுமில்லை" என்று நினைத்து அவ்வூரிலுள்ள மற்ற வியாபாரிகளின் உதவியால் மறுபடியும் சிறு கடையொன்று அமைத்து அதிலிருந்து ஒழுங்காக வியாபாரம் செய்து மேலும் மேலும் விருத்தியடைந்தான். நாளடைவில் நல்ல நிலைமைக்கு வந்து சேர்ந்தான். மற்றவனோ மனமிடிந்து, ஏக்கமுற்று, சதா தன் நஷ்டத்தை நினைத்து துக்கித்தான். அதனால் பல வியாதிகள் உண்டாகி பைத்தியம் பிடித்து அதன் காரணமாகவே நாளடைவில் உயிரையும் இழந்தான்.

பிள்ளைகளே! "முயற்சி திருவினையாக்கும்" என்றபடி, ஒருவன் ஊக்கமுடைமையால் மனம் தளராமல் துன்பம் நீங்கி இன்பம் அடைந்தான். மற்றவனோ மனதைரியம் இல்லாததாலும், ஊக்கமின்மையாலும், பலவித வியாதிகளுக்குள்ளாகி முடிவில் மரணமடைய நேர்ந்ததே! இதனின்றும் ஊக்கத்தோடெதையும் செய்ய வேண்டும், என்பது வெளியாக வில்லையா? ஆகையால் நீங்கள் ஒவ்வொருவரும் இதை நன்கு கவனிக்க வேண்டும்.

---

7. எந்தக் கருமமுமெண்ணித்துணி

நாம் எந்தக் காரியத்தைச் செய்தபோதிலும் அதை செய்வதற்கு ஆரம்பிப்பதற்கு முன்பாக, அதை செய்யலாமா, செய்யக்கூடாதா என்பதை நன்கு ஆராய்ந்து, ஆலோசித்து அதன் பின்னரே செய்ய முயலவேண்டும். அப்படியல்லாமல் ஆலோசனையில்லாமல் செய்யப்பட்ட காரியமானது, பல வித இடையூறுகளையும் துன்பங்களையும் விளைவிக்கும் என்பதற்கையமில்லை. படித்தவர்கள் கூட சில சமயங்களில், முன் ஆலோசனையில்லாமல் சில காரியங்களைச் செய்து விடுகிறார்கள். அதை நிரூபிக்க ஒரு கதையை இங்கே எடுத்துரைப்போம்.

ஒரு நாள் ஓர் உத்தியோகஸ்தன் தன் சேவகர்களுடன், அயலூருக்குச் செல்ல நேரிட்டது. வழியில் ஓர் ஆற்றைக் கடக்க நேர்ந்தது. அதில் ஜலம் அதிகமாக இருக்கக் கண்டு, அதில் இறங்கலாமா, இறங்கக் கூடாதா என்ற சந்தேகம் அவனுக்கு ஏற்பட்டது. அப்படியிருக்க, திடீரென்று ஒரு யோஜனை தென்பட்டது. "ஆற்றில் நான்கு இடங்களைக் குறிப்பிட்டு, அவற்றின் ஆழத்தைக் கூட்டி, அதன் சராசரி கண்டுவிட்டால் போதுமானது. அதைப் பார்போம்," என்று தீர்மானித்தான். ஒரு சேவகனை ஆற்றில் இறங்கச் சொல்லி, நான்கு குறிப்பிட்ட இடங்களின் ஆழத்தை அளக்கச் செய்தான். அவற்றின் அளவு, ஐந்து, நான்கு, மூன்று, இர

ண்டு அடிகளாக இருந்தன. அவற்றின் சராசரி, மூன்றரை அடியாதலால், கூசாமல் ஆற்றில் இறங்கலாமென்று உத்தியோகஸ்தன் நினைத்து, அதில் இறங்கவும் துணிந்தான்.

அந்த உத்தியோகஸ்தன் கொஞ்ச தூரம் சென்றதும், ஜலம் மார்பளவிற்கு உயர்ந்தது. நீரோட்டத்தின் சக்தியும் அதிகமாக இருந்தமையால், கால்கள் தரையில் நிற்க முடியாமல் தள்ளப் பட்டன. உத்தியோகஸ்தன் நீரில் அடித்துக் கொண்டு போகப்பட்டான். அதைக் கண்ட சேவகர்கள் அதிவிரைவில் சென்று, அவனைத் தூக்கிக் கரைக்குக் கொண்டு வந்து சேர்த்தார்கள். உத்தியோகஸ்தன் உயிர் தப்பினது பெரிய காரியமாய் விட்டது. இந்த உத்தியோகஸ்தன் புத்திதான் என்ன? சராசரி கணக்கிற்கு ஆறு கட்டுப்படுமா? இன்ன காரியத்திற்கு இன்னதுதான் செய்ய வேண்டுமென்று ஏற்பட்டிருக்கவில்லையா? ஆகையால், எந்தக் காரியத்தையும் ஆராய்ந்து செய்ய வேண்டியது அவசியமல்லவா?

பாண்டவர்கள், சூதாடலில் தோல்வியடைந்ததனால் கானகமேக நேர்ந்த தென்பதை நீங்கள் அறிவீர்கள். அப்படிச் சென்றவரைத் தொந்தரவு செய்ய வேண்டு மென்று துரியோதனாதிகள் கருதி அவர் வசித்து வந்த கானகம் சென்று அவர்கள் அறியும் வண்ணம், உல்லாசமாக அலைந்து திரி

ந்து, ஆடலிலும், பாடலிலும் காலங்கழித்து, அவர்களையும் கேலியாகப்பேசினர்கள். 'கெடுவான் கேடு நினைப்பான்' என்பதுஉண்மையன்றே? தமது சகோதரர்களை இவ்வண்ணம் வருத்தலாமா என் பதைக் கனவிலும் கருதவில்லை. "கேடுவரும் பின் னே மதிகெட்டுவரும் முன்னே" என்பதும் உண் மையே. பாண்டவரை விரட்டிவிட்டோமென்ற மமதை இவ்வித காரியங்களைச் செய்யத் தூண் டிற்று. இவ்விதம் செய்துவந்த துரியோதனாதி களை அங்கு வந்திருந்த கந்தர்வன் ஒருவன் பிடித்து அடிமையாக்கித் தூக்கிக்கொண்டு செல்லுகையில் அவர்களது அழுகைக்குரல் அங்கு வசித்துவந்த ஐவர் காதிலும் பட்டது. உடனே தருமரின் உத்தரவுப்படி, தம்பிகள் நால் வரும் வெளியேவந்து, கந்தர்வனை அடித்துத் துர த்தி விட்டு, துரியோதனாதியரை மீட்டிக்கொண்டு வந்தார்கள். தருமர் முன்கொண்டு நிறுத்தினர்கள். தருமரும் ஆபத்திலகப்பட்டவர்கள் தன் தம்பிமார் கள் என்பதை அறிந்து, மனவருத்தமடைந்து, அவர்களைச் சுகமாகச் செல்லும்படி வழி யனுப்பி னர். 'சீரியர் கெட்டாலும் சீரியர்சீரியரே!'. அத்தரு ணத்தில், துரியோதனாதிகளை பழிக்குப்பழி வாங்க வேண்டுமென்றஎண்ணமுடன் அடித்துத் துரத்த வேண்டுமானால், அப்படிச் செய்திருக்கக் கூடாதா? அல்லது கந்தர்வன் அவர்களை அடிமையாகத்

தூக்கிச்செல்லுகையில், அவர்களுக்குயாதொருஉப காரமும் செய்யாமலிருந்திருக்கக்கூடாதா? ஆனல் அவர்கள் ஏன் அப்படிச் செய்யவில்லே? துரியோ தனுதிகள் கொஞ்சமேனும் முன் ஆலோசனே யின்றி தங்கள் சகோதரர்களாகிய பாண்டவர்க ளுக்குச் சகிக்கமுடியாத இடையூறுகளேச் செய்தார் கள். பாண்டவர்களோ என்றல் தங்களுக்குத் தருணம் வாய்த்த காலத்தில், பதிலுக்குப்பதில் செய்வது அழகன்று என்று அறிந்தே அவர்க ளேச் சுகமே அனுப்பினர்கள். துரியோதனுதி களும், வெட்கமடைந்து தம் நகரை அடைந்தார் கள்.

ஆகையால் பிள்ளைகளே! பாண்டவர்களின் உதாரகுணத்தையும், துரியோதனுதியரின் மூர்க்க குணத்தையும், பார்த்தீர்களா? பாண்டவர்கள் எந் தக் காரியத்தையும் எண்ணிச் செய்யத் துணிந்த தால் அவர்கள் இன்றைக்கும் எல்லோராலும் கொண்டாடப்படுகிறார்கள். துரியோதனுதியரோ, பல துன்பங்களுக்கு ஆளாகி, எல்லோராலும் இக ழப் படுகிறார்கள்.

---

8. ஏளனமொருவரையும் செய்யாதே!

சாதாரணமாக, ஒருவன் புத்தியில் சிறியவனுக இருந்தாலும், அங்கஹீனனுயிருந்தாலும், மற்ற வர்கள் அவனேப் பார்த்து ஏளனம் செய்வது மக


ஜமாக இருக்கிறது. அது அவர்களது முற்பிறப் பின் நல்வினை, தீவினைப்பயனை ஒட்டி ஏற்பட் டவை என்பதைக் கொஞ்சமேனும் கருதுகிறார் களில்லை. தமக்கும் எந்த நேரத்தில் அங்கஹீன மோ அல்லது மற்ற குறைகளோ வாழ்நாளில் ஏற்படலாம் என்பதையும் கருதுகிறார்களில்லை. ஒருவனைப் பரிகாசம் செய்யும் பொழுது அவன் மனம் புண்படுகிறது. அதைப்போல தன்னையும் வேறொருவன் பரிகாஸம் செய்தால் தனக்கு எப் படி இருக்கும் என்பதைச் சற்றேனும் சிந்திக் கிறார்களில்லை. சுருங்கச் சொல்லின், தன்னைப் போல் பிறரையும் கருதுகிறார்களில்லை. அப்படிக் கருதாததனால், அவர்களுக்குக் கெடுதியே நேரிடுகி றது. அதாவது பிறர் தம்மைப் பரிகாசம் செய் யும்படியான நிலைமையும் சில சமயங்களில் ஏற் பட்டு விடுகிறது.

ஓர் ஊரில் சிறுவன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் கோபாலன். அவன் தாய்தந்தை யர் மிகவும் நல்லவர்கள். அவர்கள் வயோதிகர் களாக இருந்தார்கள். கோபாலன் வீட்டில் அதிக மாக இருப்பதில்லை. அவனுக்கு விளையாட்டில் பிரியம் அதிகம். எப்பொழுதும் தெருக்களிலேயே திரிந்துகொண்டிருப்பான். அவன் தன் சிநேகிதர் களிடத்தில் எப்பொழுதும் கேலியாகப் பேசி வரு வது வழக்கம். அது பெரும்பான்மையோருக்கு

விருப்பம் இராது. அடிக்கடி ஒருவருக்கொருவர் அது நிமித்தம் சண்டை நேரிடுவதுமுண்டு. ஆனல் பிள்ளைகள் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக்கொள்வதும் பின்பு சேர்ந்து கொள் வதும் ஸகஜ மல்லவா? இது வெகு நாளாக நடந்து வந்தது.

ஒரு நாள் பெரியவர் ஒருவர், காஷாய வஸ்தி ரம் தரித்து வீதிவழியாக வந்தார். அவர் தேகம் பூராவும் திருநீறு அணிந்திருந்தார். அவரது குழிந்த கண்களும், நரைத்த புருவமும், வழுக்கல் மண்டையும், வெண்ணிறமான நீண்ட தாடியும் அவரது தளர்ந்த பருவத்தைக் காட்டின. இருந்தா லும், திடமாகக் கையில் ஓர் கோலூன்றிக் கொண்டே நடந்து சென்ருர்.

நமது கோபாலன் பெரியவரைக் கண்டதும், உற்சாகத்துடன் அவருக்கெதிரில் வந்து, "தாடி நரைத்துப்போச்சே கிழவா" என்ற பாட்டைப் பாடி அவரை பரிகாஸம் செய்து கொண்டே வந் தான். அவர்பெரியாராதலின், சாந்தம், பொறுமை, அன்பு முதலிய நற்குணங்களும் அவரிடம் அமைந்திருந்தன. "சிறியோர் செய்த சிறுபிழை எல்லாம் பெரியோராயிற் பொறுப்பது கடனே," என்றபடி, கோபாலன் சொன்னதை சந்தோஷ மாகக் கேட்டுக்கொண்டு, அவன் பாடின பாட்டைக் கேட்டு வாஸ்தவத்தில் ஆனந்தமடைந்தாரே



" தாடி நரைத்துப் போச்சே கிழவா "

யொழிய கொஞ்சமும் அவனிடம் கோபம்கொள்ள வில்லை. அவனுடன் பிரியமுடன் பேசினார். தன் சட்டைப்பையிலிருந்து நாலு அணாவை எடுத்து அவன் கையில் கொடுத்து, "குழந்தாய், இதற்கு ஏதாகிலும் தின்பண்டங்கள் வாங்கிக்கொள்," என்று சொன்னார். கோபாலனுக்குண்டான ஆனந்தத்திற்கு அளவே இல்லை. இதுதான் முதல் தடவையாக அவன் ஒருவரிடமிருந்து காசு வாங்கினது. காசைக் கையில் எடுத்துக்கொண்டு தன் சினேகிதர்கள்பெயரையும் உரக்கக் கூவிக்கொண்டு, மிட்டாய்க் கடையை நோக்கிச் சென்றான். அங்கு எல்லோரும் மிட்டாய் வாங்கி, சந்தோஷமாகத் தின்றார்கள்.

மறுநாள் வழக்கம்போல் கோபாலன் தெருவில் நின்றுகொண்டிருந்தபோது, ஒருவர் நொண்டிக்கொண்டு வந்தார். அவரிடத்திலும் பரிகாஸமாகப் பாட்டுப் பாடினால் காசு கிடைக்கும் என்றெண்ணி,

நொண்டிநொண்டி, நடைநடக்கிற கொண்டையழகா,
அண்டைவீட்டுக் காரனேடே, சண்டை யென்னடா?

என்று பரிகஸித்துப் பாடினான். வந்தவருக்குக் கோபம் அதிகமாக உண்டாயிற்று. கையில் வைத்திருந்த தடியால் அடிக்க எத்தனித்தார். கோபாலன் கொஞ்ச தூரம் எட்டி நின்று கொண்டு, உயர்ந்த குரலுடன் மறுபடியும் அந்தப் பாட்டைச்

சொல்லிக் கேலி பண்ணினான்! வந்தவர் நேராகச் சென்று விட்டார். கொஞ்ச நேரத்திற்கெல்லாம் ஓர் போலீஸ் சேவகன் வந்து கோபாலனைப் பிடித்துக் கட்டி இழுத்துக்கொண்டு போனான். நொண்டி நடந்துவந்த மனிதன் முன் கொண்டு வந்து நிறுத்தினான். அவர் யார் தெரியுமா? அவர் தான் அவ்வூருக்குப் புதிதாக மாற்றிவந்த போலீஸ் இன்ஸ்பெக்டர். அவரைக் கண்டதும் கோபாலன் நடுங்கினான். அவர் கான்ஸ்டேபிளை விட்டு அவனை நன்றாக உதைக்கச்சொன்னர். அடியைப் பெற்றுக்கொண்டு, கோபாலன் வெளியே வந்தான். மனம் நொந்தான். பிள்ளைகளே ! "வீட்டாருக் கடங்காதபிள்ளை ஊராருக் கடங்காமல் போவானு?"

சில நாட்கள் சென்ற பிறகு ஒரு நாள் கோபாலன் ஓர் ஆலமரத்திலேறி இலை பறித்துக்கொண்டிருந்தான். அந்த சமயத்தில், கால் தவறி கீழே விழுந்து விட்டான். அதன் காரணமாக, ஒரு காலும் கையும் முறிந்து விட்டன. கோபாலனும் நொண்டியானான். அப்பொழுது முன் நொண்டியாயிருந்த அவனுடைய நண்பன் ஒருவன் அவனைப்பார்த்து, "கோபால, என்னை எத்தனையோ தடவை நொண்டி, நொண்டி என்று பரிகாஸம் செய்தாயல்லவா? இப்பொழுது உன் கதி என்னயிற்று பார்த்தாயா? இப்பொழுது ஒருவன் உன்னை,

நொண்டி, முடவா, என்று சொன்னல் உனக்கு எவ்வளவு வருத்தம் உண்டாகும். இதை எல்லாம் நீ அப்பொழுது அறிந்தாயா? எல்லாம் கடவுள் செயல் அல்லவா"? என்றான். இதை யெல்லாம் கேட்டதும் கோபாலனுக்குப் புத்தி உண்டாயிற்று. தான் செய்ததை நினைத்து வருந்தினன். கண்ணீர் சொரிந்தான். இனிமேல் அப்படிச் செய்வதில்லை என்று மன உறுதி கொண்டான். கொஞ்சநாளில் நல்லபிள்ளை என்ற பெயரும் பெற்றான்.

ஆகையால் பிள்ளைகளே, ஏளனம் ஒருவரையும் செய்யாதீர்கள். இதற்கு முன் தெரியாத் தனமாய் ஏளனம் ஏதாவது செய்திருந்தபோதிலும், இனிமேலாவது அப்படிச் செய்வதை விட்டுவிடுங்கள். இல்லையானல், கோபாலனைப் போல் கஷ்டப் படவேண்டி வரும்.

இராமபிரான், காட்டிற்குப்போய் அநேக கஷ்டங்களை அடைந்ததற்குக் காரணம் என்ன? அவர் சிறு குழந்தையாயிருந்தபொழுது, மந்தரை என்ற கூனியைப் பரிகாஸம் செய்தும், வில்லால் முதுகில் அடித்தும், பல துஷ்டச் செயல்களைச் செய்துகொண்டு வந்ததால் அல்லவா அவர்மேல் அவளுக்கு வெறுப்பு உண்டாயிற்று. அதை வெளிக்காட்டாமல் மனதிலேயே அடக்கி வைத்துக்கொண் டிருந்தாள். சமயம் வாய்த்தபோது இராமனுக்கு இடையூறு செய்யக் கருதினள். ஸ்ரீ

ராமபிரானின் பட்டாபிஷேக காலத்தில், கைகேயியிடம் சென்று, அவளிடம் நளினமாகப்பேசி, அவள் மனதையும் கலைத்து, பட்டாபிஷேகத்தை நடக்கவொட்டாமல் செய்தாள். அதுமாத்திரமல்ல; இராமனைப் பதினன்கு வருஷம் காட்டிற்குப் ஓட்டினாளல்லவா? ஏனத்தால் விளைந்த தீங்குகளை ஆராய்ந்து பாருங்கள். ஏனமோரு வரையும் செய்யாதீர்கள்.

---

9. ஐயமிடுவதே அழியாச்செல்வம்.

செல்வம் எப்பொழுதும் செல்வோம், செல்வோம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறது. தரித்திரமானது தரித்து இரோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறது. உலகவாழ்க்கையில் இது உண்மையாகவே இருக்கிறது. இன்றைக்குத் தனவானாயிருப்பவன் சில நாட்களில் தரித்திரனாக ஆகிவிடுகிறான். அதேபோல் இன்றைக்கு மிகவும் ஏழையாயிருப்பவன் சொற்ப நாட்களில் மிகவும் செல்வவானாகிவிடுகிறான். ஆகையால் பொருட்செல்வமானது எப்பொழுதும் நிலையானது அல்ல.

சாதாரணமாக பணம் அதிகமாக இருக்கிறவர்களிடத்தில், ஈகை, இரக்கம், முதலிய குணங்கள் இருக்கிறதில்லை. அவர்கள் நோக்கம் தங்கள் பணத்தை மேலும்மேலும் விருத்தி செய்வதைத்


தவிர வேறில்லை. பணம் எவ்வளவு இருந்தாலும் திருப்தி என்பது இல்லாமல் போய்விடுகிறது. தங்களைப்போலொத்த தனவான்களை மாத்திரம் மதித்துப் பேசுகிறார்களேயொழிய மற்றவர்களை மதிக்கிறதில்லை. ஆதலால் அஜனுல் அகங்காரமும் ஏற்பட்டுவிடுகிறது.

ஆகையால் நீர்க்குமிழியை ஒத்த செல்வத்தை நிலையாக நினைக்கலாகாது. அதன்பேரில் அதிக ஆசையும் வைக்கலாகாது. பொருளைக்கொண்டு பிறர்க்கு உதவிசெய்து தானும் உண்டு களித்திருப்பதே மிகவும் நல்லதாகும். இதை அறிந்தே, "செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்" என்று உரைத்திருக்கிறார் நம் ஔவை. மேலும், பிறக்கும் பொழுது பணத்தைக் கொண்டுவரவுமில்லை. இறக்கும்பொழுது கொண்டு போகப் போவதுமில்லை. வாழ்நாளில் பணத்தைச் சேர்த்துவைத்து, தானும் சரியானபடி உண்ணுமல், பிறருக்கும் கொடுக்காமல், வைக்கோல் படப்பின்மேல் நாய் இருந்து கொண்டு குலைப்பதுபோல், குலைத்துக்கொண்டிருப்பதில் என்ன பயன் உளது? "பிறர்க்கு உதவி செய்யாப் பெருஞ் செல்வம் வேறு பிறர்க்குதவியாக்குபவர் பேரும்", என்பது போல் இவன் காப்பாற்றிய பொருள்களை இவனது ஜீவிய காலத்திலோ அல்லது பின்னுலோ ஒருவனுக்குக் கொடுத்தே தீரவேண்டும். அப்பொழுது மற்றவர்

கள், "மகா பாபி, செல்வ மிருந்த காலத்தில் தலை கால் தெரியாமலிருந்தான். கஞ்சன், கல்மனதை யுடையவன், பணம் என்றூல் எந்தக் காரியத்தை யும் செய்யத் துணிவான்", என்று சொல்லுவார் கள். அதே மனிதன், தருமம் செய்துகொண்டிருந் ததால் "தயாள குணமுடையவன், இரக்கமுள்ள வன்,மன்னுயிரைத் தன்னுயிர்போல்பாவிப்பவன் புண்ணிய புருஷன்", என்று புகழ்ந்து பேசுவார் கள். பிற்காலத்தில் நன்மை தீமைதான் நிற்கும். நல்லவனைக் கடவுளும் நேசித்து நற்கதிக்குள் ளாக்குவார்.

திருச்செங்காட்டங்குடியில் ஒரு சிவபக்தர் இருந்தார். அவர் பெயர் சிறுத்தொண்டர். அவ ருக்கு ஒரே புதல்வன். அவனை மிகவும் அருமை யாக வளர்த்து வந்தார். அவன் பெயர் சீராளன். சிறுத்தொண்டர் ஒவ்வொருநாளும் யாருக்காவது ஒருவருக்கு அன்னமிட்டு, பிறகே தான் சாப்பிடு வது வழக்கம். ஒருவரும் அகப்படாவிட்டால், தானும் அன்றைக்கு உபவாசம் இருப்பார்.

ஒருநாள், அவருக்கு ஒருவரும் அகப்பட வில்லை. வெளியே வந்து எங்கும் சுற்றிப்பார்த் தார். ஒருவரையும் காணேம். கோயில் பக்கம் சென்று பார்த்தார். அங்கே ஒரு வயோதிகர் இருந் தார். அவரைக் கண்டதும் சிறுத்தொண்டருக்கு கொஞ்சம் சந்தோஷம் உண்டாயிற்று. அவரை



சிறுத்தொண்டர் வயோதிகரை விருந்துக்கு அழைத்தார்

விருந்துக் கழைத்தார். அவர் சம்மதிக்கவில்லை. பிறகு சிறுத்தொண்டர் கட்டாயத்தின்பேரில் ஒரு வாறு சம்மதித்து, தனக்கு நரமாமிச உணவு கொடுத்தால் வருவதாக ஒப்புக்கொண்டார். சிறுத் தொண்டரும் அதற்குச்சம்மதித்துவிட்டார். சிறுத் தொண்டர் தனது ஒரே புதல்வனுகிய சீராளனை அறுத்து பக்குவப்படுத்தி, அதிதி இலையில் இட் டார். கிழவர், "உங்கள்குழந்தை எங்கே? குழந்தை இல்லா வீட்டில் புசிப்பது முறையன்று", என்று சொல்ல, சிறுத்தொண்டர், மிக மனவருத்தத் துடன், "ஐயனே, தமது இலையில் பக்குவம் செய்து படைக்கப்பட்டிருக்கும் ஆஹாரம் எனது ஒரே புதல்வனைக்கொண்டு தயார் செய்ததே. நான் வேறு குழந்தைக்கு எங்கே செல்வது?", என்றார். அதைக்கேட்டு, வயோதிகர் மனமிரங்கி, "உன் குழந்தையின் பெயரைச் சொல்லி அழைத்தால் அவன் வருவான்," என்றார். அப்படியே அவர் கூப்பிட, சீராளன் சமையலறையிலிருந்து ஓடிவந் தான். சிறுத்தொண்டர் குழந்தையை வாரிஎடுத்து மார்போடு அணைத்து, உச்சிமோந்து, கிழவரைப் பார்க்கும்பொழுது அவரை அங்கு காணோம். அவர் மறைந்து விட்டார். கடவுளே தன் வேண்டு கோளுக்கு இணங்கி விருந்துக்கு வந்ததைப்பற்றி, அடக்க முடியாத ஆனந்தம் கொண்டார். சிறுத் தொண்டர் தர்ம சிந்தனையுடையவரா யிருந்தத

னல், கடவுளின் அனுக்கிரகம்பெற்றார். மோக்ஷம் அடைந்தார். அவர்பெயர் இன்றைக்கும் எல்லோராலும் வழங்கப்பட்டு வருகிறது. ஆகையால் ஐயமிடுவதே அழியாச்செல்வம் மற்ற செல்வங்கள் எல்லாம் அழிந்துவிடும் என்றறியுங்கள்.

---

10. ஒருவரையும் பொல்லாங்கு சொல்லாதே.

ஒருவன் மற்றவனைக் குறித்து தூஷணமான வார்த்தைகள் பிறரிடம் பேசக்கூடாது. அப்படிப் பேசுவதனால், அனேக தீங்குகள் உண்டாகின்றன. பிறர் அவனைச் சந்தேகிக்கும்படி நேரிடுகிறது. ஒரு முறை சந்தேகம் ஏற்பட்டு விட்டால், அதை மாற்றுவது மிகவும் கஷ்டம். ஏனெனில், அவனை எப்பொழுதும் சந்தேக மனதுடனே பார்க்க நேரிடுகிறது. ஆகையால் ஒருவரைப் பற்றியும் பொல்லாங்கு கூறலாகாது.

ஓர் ஊரில் பணக்காரன் ஒருவன் இருந்தான். அவனுக்கு இரண்டு குமாரர்கள் இருந்தார்கள். அவ்விருவரும் மிகவும் நேசமுள்ளவர்களாக இருந்தார்கள். இருவரும் வீட்டு வேலைகளைச் சரிவரக் கவனித்து வந்தார்கள். மூத்தவன் பெயர் வேலன், மற்றவன் பெயர் மணியன்.

இவர்கள் வீட்டில் கணக்கன் ஒருவன் இருந்தான். மிகவும் தந்திரசாலி. மற்றவர்களை மிகவும் எளிதில் ஏமாற்றும் சக்தியை உடையவன். நய

மாகப் பேசுவான். தன் இஷ்டம்போல் பிறரை தன் வசப்படுத்திக் கொள்வான். வேலனும் மணியனும் வீட்டுக்காரியங்களைக் கவனிக்க ஆரம்பித்தது முதல், கணக்கனுக்குத் தன் இஷ்டம்போல் பணத்தை எடுத்துச் செலவு செய்ய வழி இல்லாமல் போயிற்று. ஆகையால் அவன் என்ன செய்வது என்று ஆலோசித்தான்.

வேலனும் மணியனும், மிகவும் நேசமுள்ளவர்களாக இருந்தார்கள் என்று முன்னமேயே சொன்னேமல்லவா? அவர்கள் இருவரும் ஒத்திருந்ததனால்தான் தன் காரியம் பலிக்கவில்லை என்பதை அறிந்தான். அவர்களைப் பிரிப்பதற்கு என்ன வேலை செய்வது என்பதைப்பற்றி சிந்தித்தான். "எளிதில் முடித்து விடுவேன்" என்று மன உறுதி கொண்டான்.

இரு சகோதரர்களும் ஒருவரைவிட்டொருவர் பிரிந்திருக்கும் தருணங்களில், கொஞ்சம் கொஞ்சமாக, கோள் சொல்ல ஆரம்பித்தான். வேலனைப் பற்றி மணியனிடத்திலும், மணியனைப்பற்றி வேலனிடத்திலும் அவதூறான வார்த்தைகளைச் சொன்னான். கணக்கன் வெகுநாளாகத் தங்கள் வீட்டில் வேலை பார்த்து வந்த படியால், சகோதரர்கள் முதலில் அவன் பேரில் அவநம்பிக்கை கொள்ளவில்லை. ஆனால் இருவரும் சந்திக்கும்பொழுது, ஒருவரை ஒருவர், கணக்

கன் சொன்ன விஷயங்களைப் பற்றிக் கேட்டுக் கொள்ளவுமில்லை. ஆதலால், கணக்கன் ஏற்றிய விஷமானது, இருவர் மனதிலும் கொஞ்சம் கொஞ்சமாக ஏறிக்கொண்டே வந்தது. கொஞ்ச நாளில், சகோதரர்கள் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளாமல் ஒதுங்க ஆரம்பித்தார்கள். அப்பொழுது கணக்கன் வைத்தது தான் சட்டமாக இருந்தது. வேலன் கேட்டால் மணியன் செலவு செய்யச் சொன்னன் என்றும், மணியன் கேட்டால் வேலன் செலவு செய்யச் சொன்னன் என்றும் சொல்லி வந்தான். இதனால் சகோதரர்களுக்கு அதிக வருத்தம் உண்டாயிற்று. ஒருவரை ஒருவர் வெறுக்கவும் ஆரம்பித்தார்கள். இவ்விதம் நேர்ந்ததைப் பற்றி மனவருத்த மடைந்தார்கள். இன்னது செய்வது என்று ஒன்றும் தோன்றாமல் கலங்கினார்கள். ஐயோ பாவம்! குற்றமற்ற நிரபராதிகளல்லவா இவ்விரு சகோதரரும்.!!

ஒருநாள் இருவரும், ஓரிடத்தில் சந்திக்க நேர்ந்தது. அப்பொழுது வேலன் மணியனைப் பார்த்து, சகிக்க முடியாமல், "தம்பீ, நீ செய்வது ஒன்றும் நன்றாக இருக்கவில்லையே?" என்றான். அதற்கு மணியன், "நீ செய்வதுதான் நன்றாயிருக்கிறதோ? நான் என்ன செய்து விட்டேன்!" என்றான். இவர்கள் மனவருத்தத்துடன் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டு, தகப்பன் ஓடிவந்து,

"ஏனப்பா இம்மாதிரி பேசிக்கொண்டிருக்கிறீர்கள்? என்ன நேர்ந்தது, சொல்லுங்கள்?" என்றான்.

வேலன், பிதாவே! என்னைப்பற்றி மிகவும் அவதூறான வார்த்தைகளை, தம்பி நம் கணக்கனிடம் சொல்லியிருக்கிறான். இது சரியோ?" என்றான். மணியன் "ஐயா, நான் அண்ணனைப் பற்றி ஒன்றுமே கணக்கனிடம் சொன்னதில்லை. இது உண்மை. ஆனால், அவர்தான் என்னைப் பற்றி பலவாறுகத் தூஷணைகள் பேசியதாக அவன் என்னிடம் சொன்னான். இது நியாயமாகுமா?" என்றான்.

இதைக் கேட்ட வேலன், "என்ன அனியாயமாக இருக்கிறது! நான் ஒன்றும் சொல்லவில்லையே!" என்று சொல்லிக்கொண்டு ஓடிப் போய் கணக்கனைக் கூட்டிக்கொண்டு வந்தான். கணக்கன் வந்ததும் விஷயங்களை விசாரித்தார்கள். அப்பொழுது உண்மை வெளியாயிற்று. இரு சகோதரர்களும், ஒருவரை ஒருவர் சந்தேகித்ததற்காக மிக மனவருத்தமடைந்தார்கள். கணக்கன் பேரில் கடுங்கோபம் கொண்டார்கள். அவனை வேலையிலிருந்தும் நீக்கினார்கள். பின்பு இருவரும் முன்போல் ஒத்திருந்து காலங் கழித்தார்கள்.

குழந்தைகளே! கணக்கன் செய்கை நியாயமா என்பதை யோசித்துப் பாருங்கள். இரு

சகோதரர்களையும் பிரித்து வைப்பது அழகா ? அப்படிச் சொல்லியதன் நிமித்த மல்லவா குடும்பத்தில் பிளவு ஏற்பட்டது?. உண்மை வெளியாகாவிடில் அக் குடும்பத்தின் கதி என்னமாயிருக்கும்? கடைசியில் அவன் கதிதான் என்னயிற்று ? தன் வேலையை இழந்தான். எல்லோராலும் தூற்றப்பட்டான். கடவுள் கோபத்துக்குள்ளானன். நய வஞ்சகன் என்ற பெயரும் அவனுக்குக் கிடைத்தது. ஊரை விட்டும் ஓடிவிட்டான். ஆகையால் ஒருவரையும் பொல்லாங்கு சொல்லாதீர்கள்.

---

11. ஓயா வம்பு வளர்க்காதே.

ஒருவன் தனது வாழ்நாளில், எவ்வளவோ காரியங்கள் செய்யவேண்டியிருக்கிறது. அப்படிச் செய்வதற்கு நமது ஆயுட்காலமோ போதாது. ஏனெனில், ஆயுட்காலத்தில் பாதி தூக்கத்திலும், மீதியில் கொஞ்சம் இளமையிலும், சென்று விடுகிறது. இளமைப்பருவமோ இன்ப நுகர்ச்சியில் கழிக்கப்படுகிறது. மீதிகாலமோ வீண் வம்புகளிலும், சண்டை சச்சரவுகளிலும் கழிக்கப்படுகிறது. ஆகவே, இக்காலத்தில் கடவுள் வழிபாட்டைக் கருதுவார் எவரும் இலர் என்னலாம்.

இப்படிப்பட்ட விலைமதிக்க முடியாத நேரத்தை சிலர் கொஞ்சமும் முன்யோசனை இல்லாமல் வீண் வம்புகளிலும், சண்டை சச்சரவுகளிலும்,

பிறருக்குத் தீங்கிழைப்பதிலும், அனுவசியமாகக் கழித்துவிடுகிறார்கள். இது அறியாமையினலன்றி வேறல்ல. கடந்துபோன காலம் கதறினலும் வருமா? வீண் வம்புகளால் விளையும் தீமைகளை ஒருவன் உண்மையில் உணர்ந்திருந்தால், அதைக் கனவிலும் செய்யக்கருதான். வம்பனை யார் நம்புவார்கள்? அவனுல் எந்தத் தொழிலைச் செய்து முடிக்க முடியும்? இவ்வுலகம் யாரால் நடைபெறுகிறது? வம்பு பேசி காலத்தைக் கழிக்கிறவர்களாலா, அல்லது, அவரவர் வேலைகளில் கண்ணும் கருத்துமாய், உழைக்கும் தொழிலாளர்களாலா, என்று சற்றே யோசித்துப் பாருங்கள்? ஓயா வம்பு வளர்த்ததால், உண்டான தீமையை விளக்க ஒரு கதையைக் கூறுவோம்.

ஒரு காலத்தில் ஓர் ஊரில் கோவிந்தன் என்ற சிறுவன் இருந்தான். அவன் பாடசாலையில் தன் நண்பர்களிடத்தில், ஓயாமல் வம்பேபேசிக்கொண்டிருந்தான். இப் பழக்கமானது கெட்ட சகவாசத்தால் ஏற்பட்டு விட்டது. வகுப்பில் மற்ற மாணவர்களையும் வேலை செய்ய விடமாட்டான். தானும் யாதொரு வேலையும் செய்யான். பரீக்ஷைகளிலெல்லாம் தோல்வியே நேர்ந்தது. இதில் என்ன ஆச்சரிய மிருக்கிறது? உபாத்தியாயர்கள் அவனுக்கு எவ்வளவோ புத்திமதி சொல்லியும் ஒன்றும் பயன்படவில்லை. வினையாட்டாக வம்புபேச ஆரம்பித்

தது வினையாகவே முடிந்தது. அதற்குள் அவனுக்கு வயதும் அதிகரித்து விட்டது. ஜீவனத்திற்கு வகை தேடவேண்டியதாயிற்று. வேலைக்காக அலைந்து திரிந்தான். முடிவில், ஓர் கடையில் கணக்கெழுதும் வேலை கிடைத்தது. ஆனல் சிறு வயதில் அவனுக்கு ஏற்பட்ட பழக்கம் மாத்திரம் அவனை விட்டு விலகவில்லை. அதனல், கடையிலும் வீண் வம்பு பேச ஆரம்பித்தான். பக்கத்துக் கடைக்காறர்களிடம் வீண் மனஸ்தாபம் உண்டாயிற்று. தன்வேலைகளையும் சரிவர நடத்த முடியாமல் போயிற்று. அதன் நிமித்தம், அவன் முதலாளிக்கும் கஷ்டம் ஏற்பட்டது. முதலாளி நல்ல குணமுடையவராக இருந்தமையால் அவனுக்கு எவ்வளவோ புத்திமதிகள் சொன்னர். அவை அவனுக்கு அப்பொழுது நன்மைஎனத் தோன்றியதேயொழிய நீடித்து நிற்கவில்லை. அன்று மற்றவர்களிடம் ஒன்றும் பேசாமலிருந்தான். கொஞ்சம் வேலையும் பார்த்தான்.

சிறுவயதில் கைக்கொண்ட பழக்கம் ஒருநாள் உபதேசத்தால் விலகிவிடுமா? அதனலன்றே, "தொட்டில் பழக்கம் சுடுகாடுமட்டும்," என்ற பழமொழி ஏற்பட்டிருக்கிறது? முதலாளிக்கு அவனிடம் அனுதாபம் ஏற்படவில்லை. வெறுப்பே உண்டாயிற்று. முதலாளி அவனல் அடைந்த லாபமென்ன? கஷ்டமும் நஷ்டமும் தவிர

வேறில்லை. அதனால் கோவிந்தன் வேலையி லிருந்து நீக்கப்பட்டான்.

பல இடங்களில் வேலை காலியிருந்தும் அவ னது வம்பு பேசும் பழக்கத்தால், அவனை ஒரு வரும் வேலையில் அமர்த்திக்கொள்ள இஷ்டப் படவில்லை. அதனால் கொஞ்சகாலம் வேலை இல் லாமல் கஷ்டப்பட்டான். வம்பனுக்கு யார்தான் வேலை கொடுப்பார்கள்? அவன் கஷ்டப்படுவதைக் கண்டு சிலர் மனமிரங்கினர்கள். இனிமேலாகி லும் ஒழுங்காக வேலை செய்யமாட்டானா என் றெண்ணி, ஓர் தனிகன் தன் பண்ணையில் அவனை அமர்த்திக்கொண்டான். அங்கு தன் வேலையைச் செய்துகொண்டிருக்கையில் தனக்குத் தெரியா மலே வம்பு பேசும் பழக்கம் அவனைத் தூண்டுவ துண்டு. அவனும் அக்கொடிய பழக்கத்தைத் தவிர்க்க முயன்றபோதிலும் இடையிடையே வம் புக்கு இழுக்கப்பட்டான். அவனுடன் வேலை பார்த்த அனைவரும் அவனுக்கு அடிக்கடி நற்புத் தியைப் புகட்டினர்கள். அவன் முன் கஷ்டப்பட் டதையும் அடிக்கடி எடுத்துக்காட்டினர்கள். அத னால் அவன் கொஞ்சம் கொஞ்சமாக தன் தூர் அப்பியாசத்தை மறக்க ஆரம்பித்தான். வேலை யில் ஊக்கங் கொண்டான். அவனுக்கு நல்ல மதிப்பும் ஏற்பட்டது. கொஞ்ச நாளில் நல்லவன் என்ற பெயரையும் பெற்றான்.

வம்புபேசும் பழக்கமானது அவனது ஆயுட் காலம் பூராவும் அவனைத் தொடர்ந்துகொண்டே வந்திருந்தால், அவன் கதி என்னமாயிருக்கும்? அவன் வாழ் நாளெல்லாம் வீண் நாளாகப் போயிருக்குமல்லவா? அவன் ஜீவனத்திற்கு மிகவும் கஷ்டப்பட்டிருப்பான். வம்பன் என்ற பெயரும் அவனை விட்டகலாமலே இருந்திருக்கும். ஆகையால் பிள்ளைகளே! நீங்கள் ஒரு பொழுதும் ஒயா வம்பு வளர்க்காதீர்கள்.

---

12. கௌரவமாகத் தொழில்கள் செய்.

யார் யார் எந்தெந்தத் தொழிலில் இறங்கின போதிலும், அதைக் கௌரவமாகவும், நியாயமாகவும் செய்துவரவேண்டும். அப்படிச் செய்து வந்தால், தக்க கண்ணிய மடையலாம். அதே தொழிலை அநியாயமான வழியில் செய்துவந்தால், அகௌரவத்தையே அடைய நேரிடுகிறது.

ஓர் ஊரில் சங்கரன் என்ற வியாபாரி ஒருவன் இருந்தான். அவன் தெய்வபக்தியுள்ளவன். "சத்தியமே ஜயம்" என்பதைக் கைகொண்டவன். சிறு குழந்தைகளையும், வயோதிகர்களையும் அன்புடன் பாவித்து வந்தான். அவன் கடையில் ஒரே விலை தான். இரண்டாவது விலையே கிடையாது. அவன் அதிகலாபம் வைப்பதும் கிடையாது. அதிகலாபம் வைத்து சாமான்

களை விற்பது மிகவும் பாவம் என்றும், அப்படிச் செய்பவர்களைக் கடவுள் தண்டிப்பார் என்றும், அவன் எண்ணியிருந்தான். சங்கரன் கடைச் சரக்குகளும் எப்பொழுதும் சுத்தமாகவும், நய மாகவும் இருக்கும். இதை அறிந்து அவ்வூரார், அவன் கடைக்கு தங்கள் சிறுவர், சிறுமிகளை அனுப்பிச் சாமான்கள் வாங்கிவரும்படி செய்வார் கள். அதனல் அவனுக்கு வியாபாரம் அதிகரித் தது. "பலதுளி பெருவெள்ளம்," என்பதே போல் அவன் சொற்பலாபம் வைத்தபோதிலும், சரக்குகள் அதிகமாக விற்பனையானபடியால், ஏராளமாகவே லாபமும் கிடைத்தது. மேலும், அவன் நல்ல குணமுடையவனுக இருந்தமை யால், அவனை எல்லோரும் நேசித்தார்கள். அவ னுக்கு மரியாதை காட்டினர்கள். அவன் எங்கே சென்றாலும் அவனுக்குத் தக்க கௌரவமும் ஏற் பட்டது.

அதே கடைத்தெருவில், செட்டியார் ஒருவர் வியாபாரம் செய்து வந்தார். அவருக்கு பணம் தான் தெய்வம். எந்த விதத்திலாவது அதிகப் பணம் சேர்த்துவிட வேண்டு மென்பதுதான் அவர் கருத்து. பணம் சேருவதும், சேராததும் ஒருவன் கையிலா இருக்கிறது?

பணம் சேர்த்துவிடவேண்டும் என்ற ஆவல் மாத்திரம் ஒருவனுக்கு இருந்தால் போதுமா?

12526

செட்டியார் இந்த ஒரே கருத்தை மனதில் வைத்துக்கொண்டு, வியாபாரம் செய்ய ஆரம்பித்தார். சங்கரன் கடையைவிட காலணு அல்லது அரையணு குறைந்தே சரக்குகளை விற்பனை செய்துவந்தார். இரண்டு மூன்று தினங்களுக்கு, விலை சகாயமாயிருக்கிறதென்று, செட்டியார் கடையில் ஊரார் சாமான்கள் வாங்கினர்கள். ஆனால் வீட்டிற்குச் சென்று சாமான்களைப் பார்த்தால், அளவு குறைவாகவும், சரக்குகள் கலப்புள்ளதாகவும் இருந்ததைக் கண்டார்கள். ஆகையால், செட்டியார் மேல் அவநம்பிக்கை கொண்டு, எல்லோரும் மறுபடியும் சங்கரன் கடைக்கே போய்விட்டார்கள். செட்டியார் கடையில் வியாபாரமே ஆகவில்லை. சரக்குகளெல்லாம் அப்படியே நின்றுவிட்டன. அவன் விரும்பி அழைத்தாலும் ஒருவரும் போகவில்லை. ஏனென்றால், ஊராருக்கு அவன் பேரில் அவநம்பிக்கை ஏற்பட்டுவிட்ட தல்லவா? சிறு பிள்ளைகள் கூட அவனைக் கண்டால் "சுக்குச் செட்டி" என்று பரிகாசம் செய்வது வழக்கமாயிற்று. ஊராரிடத்திலும் அவன் கௌரவத்தை இழந்தான். ஆகையால் நாம் எந்தத் தொழில் செய்தபோதிலும் அதை நியாயமாகவும், கௌரவமாகவும் செய்ய முயலவேண்டும்.

Printed at the B. N. Press, Mount Road, Madras.

RSR 1305

	Price Rs. As. P.
1. **Komalangi** or (A Health Drama) ...	0 4 0
2. **Twelve Moral Stories** ...	0 4 0

These books can be had from,

(1) *The Author.*

(2) *K. V. Narayana Ayyar,*
Book Seller, Dindigul.
